# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தனிச்சுற்றுக்கு
நன்கொடை
ரூ-20

ஜனவரி 2015

பருவம் 1 புனல் 4





காதலர் நாள் கொண்டாட்டம்
திராவிடர் உணவு விழா
அன்றாட வாழ்வில்
அறிவியல் பண்பாட்டை
நடைமுறைப்படுத்துவது
குறித்த கலந்துரையாடல்
கருந்திணைப் பண்பாட்டுக்
குடும்பத்திலுள்ள, கல்வி, தொழில்,
தனித்திறனில் சிறப்பிடம்
பெற்றவர்களுக்குப் பாராட்டு
குழந்தைகளுக்கான
கலைப்போட்டிகள்
மலையேற்றம்
ஆக்கப்பூர்வ செயல் திட்டங்கள்

2015 பிப்ரவரி **14,15**
திண்டுக்கல்

கட்டுக்கள் தளர்த்தி இயல்பாய்த் துளிர்க்க ஒரு கொண்டாட்டம்..

# கருந்திணை ஒன்றுகூடல்

ஜாதி உறவுகளைக் கடந்து தோழமை உறவுகளோடு கைகோர்த்து
அறிவியல் பண்பாட்டை நடைமுறைப்படுத்த விழையும் குடும்பங்கள்,
காதல் இணையர், சேர்ந்து வாழும் இணையர், தனித்து வாழும் பெண், திருநங்கை, திருநம்பி,
ஆண் அனைவருக்குமான உற்சாக ஒன்று கூடல்


தொடர்புக்கு:
Dr.பெரியார்செல்வி: 98656 30383
தேவகி: 90957 95744






நன்கொடை
பெரியவர்கள் ரூ.500
குழந்தைகள் ரூ.250

ஒருங்கிணைப்பு: **கருந்திணைப் பண்பாடு**

காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தொகுப்புக்குழு
யாழ் மொழி
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
கொளத்தூர் குமார்
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
பூ. மணிமாறன்

சட்ட ஆலோசனைக்குழு
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

விளம்பரத் தொடர்பு
சி. விஜயன் 94881 79109,
ஜீவாநகர் குமார் 99944 77013

விற்பனைத் தொடர்பு
ஆ. பாண்டியன் 96591 12891,
கடத்தூர் காந்தி 99428 76665
வெங்கட் 95788 44141

சந்தா தொடர்பு
அ. கிருட்டிணகுமார்
97882 97428

வடிவமைப்பு
Mukizh Media

அச்சு
செல்வக்குமார்
BS Graphics, Chennai

அலுவலக நிர்வாகம்
சி. இராவணன் 97868 89325

ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு
காட்டாறு, 1 / 810
முத்தமிழ்நகர், நத்தம் சாலை,
திண்டுக்கல். 624003
kaattaaru2014@gmail.com

வெளியீடு:
சுயமரியாதை கலைப் பண்பாட்டுக் கழகம்

# திராவிடர் இயக்கக் கூட்டமைப்பு உருவாகட்டும் !




முகநூல் பக்கங்கள் ஒரு போதையாகவே மாறியுள்ள இந்தக்காலத்தில், முகநூல் பக்கங்களை வெறும் பொழுதுபோக்கிற்கு மட்டுமே பயன்படுத்திவரும் இந்தியச் சூழலில், அந்த முகநூல் பக்கங்களையும், வலைப்பூக்களையும் பெரியாரியல் பரப்புரைக்குக் களமாகப் பயன்படுத்தும் பலதோழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம் போன்ற பல பெரியார் இயக்கங்களில் பணியாற்றுகிறார்கள். தாம் இருக்கும் இயக்கத் தலைமைக்கு ஏற்ப எதிரும் புதிருமாக முரண்பட்டு, கருத்துக்களை எழுதி வந்த இந்தத்தோழர்கள் 2009 க்குப்பிறகு வலைப்பூக்களில் ( Blog ) திராவிடர் இயக்கங்களுக்குள் எதிர்த்து எழுதிக்கொள்வதை நிறுத்திக்கொண்டார்கள். வெளிப்படையாக தெரிந்தும், தெரியாமலும் ஒருவருக்கொருவர் மின்னஞ்சல்களில் விளக்கம் கேட்பது, ஒருவருக்கொருவர் ஆலோசனைக் கூறுவது என்ற அளவில் திராவிடர் இயக்க இணையதளச் செயல்பாட்டாளர் களிடையே ஒரு அறிவிக்கப்படாத உறவு உண்டானது.

அதன்பிறகு தோழர் மணியரசன், தோழர் சீமான் போன்ற சிலரது பெரியாரிய எதிர்ப்புக் கருத்துக்களும், இந்துத்துவ ஆதரவுச் செயல்பாடுகளும் இந்த வெளியில் தெரியாத உறவுகளை வெளிப்படையான உறவுகளாக்கின. குறிப்பாக தோழர் சீமான் அவர்கள் வெளியிட்ட ஆவணம், திராவிடர் இயக்க இணையதளச் செயல்பாட்டாளர்களை ஒரே அணியாக்கி, ஒன்றாகக் குரல்கொடுக்க வைத்தது. அதற்காக நாம் தமிழரின் ஆவணத்திற்கும், தோழர் மணியரசன் அவர்களின் தமிழர் கண்ணோட்டத்திற்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். இணையதளங்களிலும், வலைப்பூக்களிலும் உருவான உறவு, முகநூல் பக்கங்கள் தவிர்க்கஇயலாதவை என்ற கட்டத்தை அடைந்துள்ள இந்த நேரத்தில், முகநூல் பதிவர்களிடையேயும் ஒரு ஒருங்கிணைப்பை உருவாக்கியது

தோழர் பெரியார் சாக்ரடீஸ் படத்திறப்பு நாளில் தோழர்கள் அறிவுமதி, சத்யராஜ், சுப.வீரபாண்டியன் ஆகியோர் திராவிடர் இயக்கங்கள் ஒரு கூட்டமைப்பாக இயங்க வேண்டியதன் அவசியத்தை விளக்கிப் பேசினர். அதற்கு பதிலளிக்கும் வகையில் திராவிடர் கழகத் தலைவர் தோழர் வீரமணி அவர்கள் திராவிடர் இயக்கக் கூட்டமைப்பை வரவேற்றுப் பேசினார். அதைத் தொடர்ந்து திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர்,தோழர் கொளத்தூர்மணி,தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தோழர் கு.இராமகிருட்டிணன் ஆகியோரும் கூட்டமைப்பு முயற்சியை வரவேற்று அறிக்கை கொடுத்தனர்.

மேற்கண்ட நிகழ்வுகளின் தொடர்ச்சியாக, முகநூல் பக்கங்களில் தீவிரமாகப் பரப்புரை யாற்றும் திராவிடர் இயக்கங்களின் தோழர்கள் ஒன்றிணைந்து இளந்திராவிடர் என்ற முகநூல் பக்கத்தை உருவாக்கினர். ஏற்காட்டில் 05.10.2014 இல் இளந்திராவிடர்களின் முதற்கட்ட சந்திப்பும் நடத்தப்பட்டது. ஜாதியற்றோர் இடஒதுக்கீடு உள்ளிட்ட பல தீர்மானங்களை இயற்றிய இந்தக் குழு அண்மையில் அனைத்து திராவிடர் இயக்கத் தலைமைகளையும் நேரில் சந்தித்து தீர்மானங்களின் விபரங்களை விளக்கியுள்ளது.

இந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி மூன்று திராவிடர் இயக்கத் தலைவர் களையும் சந்தித்து இளந்திராவிடர் நிகழ்வு குறித்து விளக்கி ஆதரவினைக் கோருவது எனவும், தீர்மானங்களை வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது.

அந்த வகையில் முதலில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களை சென்னை பெரியார் திடலில் 24.12.2014 அன்று மாலை இளந்திராவிடர் குழு நேரில் சந்தித்து தீர்மானங்களை வழங்கினர். தீர்மானங்களை படித்து பாராட்டிய ஆசிரியர் அவர்கள், இளந்திராவிடர் குழு மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளை வழங்கி வாழ்த்துகளை தெரிவித்தார்.

அடுத்த சந்திப்பாக 29.12.2014 அன்று மாலை திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்களையும், தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் தோழர் கு.இராமகிருட்டிணன் அவர்களையும், ஒன்றாக, கோவை காந்திபுரம் 'பெரியார் படிப்பகத்தில்' நடந்தது. இளந்திராவிடர் குழுவின் நோக்கம், செயல்பாடுகள் குறித்து இந்தக்குழு தலைவர்களிடம் விளக்கியது. தீர்மானங்கள் தலைவர்களிடம் வழங்கப்பட்டன.

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்கள், "காலத்தின் தேவையான இப்பணியை வரவேற்கிறேன் பாராட்டுகிறேன்" என்றார்.

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள், "இப்பணியைத் தொடர்ச்சியாக இக்குழு செய்ய வேண்டும்" என்றார்.

தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தோழர் கு.இராமகிருட்டிணன் அவர்கள், "எங்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் எப்போதும் உண்டு" என்றார்.

தீர்மானங்களை படித்து பாரட்டிய தலைவர் கள் இளந்திராவிடர் குழுவின் ஒன்று கூடல் நிகழ்விற்கு தங்கள் ஆதரவினையும், பாராட்டுக் களையும் மென்மேலும் செயல்பட வாழ்த்துக்களையும் தெரிவித்தனர். மேலும் பல ஆலோசனைகளையும் வழங்கி ஊக்கப்படுத்தினர். தொடர்ந்து ஆலோசனைகளை வழங்கவும், ஒத்துழைப்பு கொடுக்கவும் தயாராக இருப்ப தாகவும் கூறினர். திராவிடர் இயக்கங்களின் கூட்டமைப்பை உருவாக்க முனையும் அனை வரையும் வாழ்த்துகிறோம். வரவேற்கிறோம். இந்த ஒருங்கிணைப்பு திராவிடர் இயக்கங்களோடு நில்லாமல் அம்பேத்கரிய மார்க்சிய தேசிய இன விடுதலை அமைப்புகளின் ஒருங்கிணைப்பு என்ற நிலைக்கு முன்னேற வேண்டும் என்ற எமது பேராவலையும், அதற்கும் யாராவது முன் முயற்சியைத் தொடங்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைக்கிறோம்.



பூங்குழலி

# 1 காதலைப் புரிந்து கொள்வோம்



காதல்.. இல்லை இல்லை.. கா............தல்! அந்த ஒரு சொல் ஏற்படுத்தும் உணர்வுகள் பல.. கிளர்ச்சி, பரவசம், மகிழ்ச்சி, வெட்கம், நெகிழ்ச்சி, ஏமாற்றம், வேதனை, வலி, துன்பம், கோபம், வெறுப்பு.. எத்தனையோ.. ஆனால் எவ்வித உணர்வும் இன்றி இந்த சொல்லை கடந்து போவது அத்தனை எளிதானது அல்ல.

காதலைக் கொண்டாடாத இலக்கியங்கள் கொண்ட மொழி எதுவும் இல்லை. காதலை ஒரு முறையேனும் பாடாத கவிஞர்கள் உலகில் எங்கும் இல்லை. காதலை போன்ற உலக பொது மொழி வேறு இல்லை.

தமிழ் இலக்கியங்களில் காதல் வெறுமனே பேசு பொருளாக மட்டும் இருக்கவில்லை. கொண்டாட்டத்திற்குரிய பொருளாகவே இருந்துள்ளது. இன்று வரை இருக்கிறது. திருக்குறள், சங்க இலக்கியங்கள் தொடங்கி இன்றை திரைப்படப் பாடல்கள் வரை காதலை ரசித்து, உருகி, கொண்டாடுவதே வழக்கமாக இருந்து வருகிறது.

ரொமான்டிக் என்ற ஆங்கிலச் சொல்லின் உண்மையான பொருள் கற்பனைக்கு அப்பாற்பட்டது அல்லது நடைமுறை சாத்தியமற்றது என்பதுதான். ஆனால் காதல் உணர்வை குறிக்க ரொமான்டிக் என்ற சொல் பயன்படுத்தப்படுவது தவறாக அல்ல. ஏனெனில் காதல் உணர்வு என்பதே கற்பனைக்கு அப்பாற்பட்டதுதான்.

காதல் உணர்வு ஒரு மனிதனுக்குள் ஏற்படுத்தும் மாற்றம் நம்ப இயலாததாகவே உள்ளது. நேர்மையை வாழ்வின் நெறியாக கொண்டவர்கள் கூட காதல் வசப்பட்டால் உண்மைகளை மறைக்கக் கற்றுக் கொள்கிறார்கள். மறுபுறம் அதே காதல் எத்தனையோ பேரை தவறான பாதையில் இருந்து திருத்தி மீட்டுள்ளது.

“ஒரு பார்வை, ஒரு சிரிப்பு, ஒரு சின்ன உரசல் கூட இத்தனை மகிழ்ச்சியைத் தந்து விட முடியுமா என்ற வியப்பை ஏற்படுத்தக் கூடியது காதல் மட்டுமே.”

காதல் உணர்வு ஏற்பட்டபின், ஆணோ பெண்ணோ, சுற்றத்தை மறக்கின்றனர். பாரதிராஜா படங்களில் வருவதைப் போல தங்களை சுற்றி இருக்கும் அனைவரும் சிலையாக மாற தாங்கள் மட்டும் வாழ்வதாக நினைத்துக் கொள்கின்றனர். தங்கள் காதல் வாழ்வைத் தாண்டி வேறு எதுவுமே இவர்கள் சிந்தனையில் வருவதில்லை. அதை பற்றியே சிந்திக்கின்றனர். அதைப் பற்றி மட்டுமே பேச விரும்புகின்றனர். காதல் இணை அருகில் இருந்தால் உலகமே அன்பு மயமாகிறது. அனைத்தும் அழகாகிறது. இணை விலகிச் சென்றால் பெற்ற தாயின் முகமும் மகிழ்ச்சியைத் தருவதில்லை. உலகமே கெட்டவர்களால் நிறைந்திருப்பதான தோற்றம் ஏற்படுகிறது. எதுவும் பிடிப்பதில்லை.

பரவசம் இந்த சொல்லின் பொருளே காதல் இணையின் அருகில் இருக்கும் போதுதான் புரிகிறது. காதலில் மட்டுமே ஒவ்வொரு துளி பருகும் போதும் தாகம் அதிகமாகிறது. ஒரு பார்வை, ஒரு சிரிப்பு, ஒரு சின்ன உரசல் கூட இத்தனை மகிழ்ச்சியைத் தந்து விட முடியுமா என்ற வியப்பை ஏற்படுத்தக் கூடியது காதல் மட்டுமே.

இவ்வுலகில் உள்ள எத்தனை வீரியமான போதைப் பொருளும் ஏற்படுத்த முடியாத போதையை ஏற்படுத்தும் வல்லமை படைத்தது காதல் உணர்வு. மீண்டும் மீண்டும் நாட தூண்டுவது. விட்டு விலகவே முடியாத அளவுக்கு ஒருவரிடம் கட்டிப் போடும் ஆற்றல் காதலுக்கு உண்டு. காதல் இணை இல்லையெனில் வாழ்வே இல்லை என்று எண்ணத்தை ஏற்படுத்தக் கூடியது அந்த உணர்வு.

ஆனால் நண்பர்களே.. மேலே சொன்ன அத்தனை உணர்வுகளும் எந்த அளவு உண்மையோ அந்த அளவு அவை வெறுமனே நம் உடலில் உள்ள சுரப்பிகளால் ஏற்படும் இரசாயன மாற்றங்கள் மட்டுமே என்றால் நம்ப முடிகிறதா? நாம் ரசித்து மயங்கும் இந்த உணர்வுகள் அனைத்தும் சுரப்பிகள் காட்டும் விளை யாட்டுகள் என்பதை கடந்து ஒன்றுமே இல்லை என்றால் ஏற்க முடிகிறதா? ஆனால் அதுதான் உண்மை.

காதல் என்பது ஓர் அறிவியல் நிகழ்வு மட்டுமே. அதிலும் வேதியியல் நிகழ்வு மட்டுமே. பசி என்பதும் தாகம் என்பதும் எவ்வாறு சுரப்பிகளால் ஏற்படும் இயல்பான அறிவியல் நிகழ்வோ அதை போன்றதே காதலும் ஓர் இயல்பான அறிவியல் நிகழ்வு மட்டுமே. அதை கடந்து அதில் சிறப்பாக கொண்டாட எதுவும் இல்லை என்கின்றன அறிவியல் ஆய்வுகள்.

> **“காதல் என்பது ஓர் அறிவியல் நிகழ்வு மட்டுமே. அதிலும் வேதியியல் நிகழ்வு மட்டுமே. பசி என்பதும் தாகம் என்பதும் எவ்வாறு சுரப்பிகளால் ஏற்படும் இயல்பான அறிவியல் நிகழ்வோ அதை போன்றதே காதலும்**

ஏன் ஒருவர் அல்லது ஒரு சிலர் மீது மட்டும் நமக்கு ஈர்ப்பு ஏற்படுகிறது? நம் நண்பரின் கண்களுக்கு தேவதையாகத் தெரியும் ஒரு பெண் நமக்கு அப்படித் தெரியாததற்கு என்ன காரணம்? பெண்களுக்கு உடல் வலுவுள்ள, சிக்ஸ் பாக் கொண்ட ஆண்களைதான் பிடிக்குமா? அழகான பெண்களின் அளவுகோலாக குறிக்கப்படும் உடல் அளவுகளுக்குப் பின் உள்ள அறிவியல் என்ன? ஒருவர் மீது ஏற்படும் காதல் வாழ்நாளெல்லாம் தொடருமா? தொடர வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்? உண்மையில் நமக்கு வந்திருப்பது காதல்தானா என்பதை எப்படித் தெரிந்து கொள்வது?

இவை அனைத்திற்குமான பதில்களும் நம் சுரப்பிகளின் செயல்பாடுகளில் ஒளிந்துள்ளன. கண்டவுடன் காதல் என்பதில் தொடங்கி, இணையர் இல்லையேல் வாழவே இயலாத நிலை வரை அனைத்திற்கும் அறிவியல் விளக்கங்கள் உள்ளன.

அவற்றை விளக்குவதே இத்தொடரின் நோக்கம். காதலை உணர்வுப் பூர்வமாக மட்டு மல்லாமல் அறிவுப்பூர்வமாகவும் அணுகி நம் வாழ்விற்கு உகந்த துணையைத் தேர்ந்தெடுக்க இத்தொடர் உதவும்.

முத்தப் புரட்சி முகிழ்த்திருக்கும் இக் காலத்தில் நாம் புரிந்து கொள்ள வேண்டிய அடிப்படை ஒன்று உள்ளது. முத்தம் என்பது மிக இயல்பானது. அதை விட இயல்பானது காதல். அதையும் விட இயல்பானது காதலில் தோல்வி. இவை அனைத்தையும் விட இயல்பானது மீண்டும் முகிழ்க்கும் காதல். அந்த இயல்பைப் புரிந்து கொள்ள இத்தொடர் உதவும்.

தமிழ்ச் சூழலில் காதல் கொண்டாடப் படுவது போல் வேறு எதுவும் கொண்டா டப்படுகிறதா என்று தெரியவில்லை. அதே நேரம் காதல் மீது ஒரு புனிதத் தன்மை ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. காதல் என்பது ஒருவருக்கு ஒரு முறைதான் வரும். அதுதான் உண்மையானது


என்ற ஒரு கற்பிதம் பரப்பப்பட்டுள்ளது. இந்தப் பணியை திரைப்படங்கள் செவ்வனே செய்கின்றன. அண்மைக் காலங்களில் வெளியான ஆட்டோகிராப், அட்டக்கத்தி போன்ற வெகு சில படங்கள் தவிர பிற படங்கள் அனைத்தும் ஒற்றைக் காதலை வலியுறுத்தியே வந்துள்ளன.

ஆட்டோகிராப்பும் அட்டக்கத்தியும் கூட ஓர் ஆணின் பார்வையில் வெளிவந்த படங்கள்தான். தமிழ் சினிமாவின் நாயகி ஒருவனை மனதார நினைத்து விட்டால் அவனுக்காகவே தன் வாழ்நாளெல்லாம் உருகக் கூடியவள். அவனை மணம் செய்ய இயலாமல் போனாலும் அவனை நினைத்தே தன் வாழ்வை தனியாக கடப்பாள். அல்லது சூழல் காரணமாக வேறு ஒருவரை மணக்க நேர்ந்தாலும் இறுதியில் இறந்து போவாள். இந்த பிம்பத்தைத் தவிர வேறு ஒன்றையும் தமிழ் சினிமா சித்தரித்தது இல்லை. நான் அறிந்த வரையில் இதற்கு மாறாக வெளியான ஒரே படம் ருத்ரையா இயக்கிய அவள் அப்படித்தான் என்ற படம் மட்டுமே.

இப்படி காதலின் புனிதத்தை காப்பதில் தமிழ்ச் சமூகம் மொத்தமாக ஈடுபட்டிருக்க, அறிவியலோ வேறு சொல்கிறது. “உண்மைக் காதல் ஒரு முறைதான் வரும்.. அது எந்தக் காதல் என்பதுதான் கேள்வி” என்று எங்கோ படித்த வரிகள் நினைவுக்கு வருகின்றன. அறிவியல் ஒவ்வொரு மனிதனுக்கும், அது ஆணானாலும் சரி பெண்ணானாலும் சரி காதல் உணர்வு பலர் மீது வரக்கூடும் என்கிறது.

மனித மூளையில் சுரக்கக் கூடியதும் சாக்லேட் போன்ற ஒரு சில உணவுப் பண்டங்களில் இருக்கக் கூடியதுமான ஒரு இரசாயனப் பொருள் பினைல்எதில்அமைன் (Phenylethylamine). இது உணர்வுகளை தூண்டும் தன்மை வாய்ந்தது. நோரிபைன்பிரைன் (Noripinephrine) மற்றும் டோபாமைன் (Dopamine) என்ற ஹார்மோன்களை இது தூண்டிவிட்டு சுரக்க வைக்கிறது. இந்த இரண்டு ஹார்மோன்களே காதல் உணர்வினை ஏற்படுத்துகின்றன. பரவச நிலை, தலைகால் புரியாத தன்மை போன்ற உணர்வுகளை ஏற்படுத்துவது இந்த இரசாயனங்களே.

**டோபோமைன் கிளர்ச்சியை ஏற்படுத்தும் இரசாயனம். இது ஏற்படுத்தும் கிளர்ச்சியானது மீண்டும் மீண்டும் நாட வைக்கும் தன்மை வாய்ந்தது. இதுதான் சூதாட்டம், போதை மருந்துகள், குடி போன்றவற்றின் போது சுரக்கிறது.**




இதில் டோபோமைன் கிளர்ச்சியை ஏற்படுத்தும் இரசாயனம். இது ஏற்படுத்தும் கிளர்ச்சியானது மீண்டும் மீண்டும் நாட வைக்கும் தன்மை வாய்ந்தது. இதுதான் சூதாட்டம், போதை மருந்துகள், குடி போன்றவற்றின் போது சுரக்கிறது. அதற்கு மனிதர்களை அடிமைப்படுத்துகிறது. இதே இரசாயனம்தான் காதலின் போதும் சுரக்கிறது. அதனால்தான் காதல் ஒரு போதையைப் போல மனிதனை மயக்குகிறது. மீண்டும் மீண்டும் நாட வைக்கிறது.

யாரை பார்க்கும் போது நமக்கு இந்த இரசாயனம் சுரக்கிறதோ அவர்களிடம் நாம் மயங்குகிறோம். அந்த கிளர்ச்சி உணர்வு நமக்கு மீண்டும் மீண்டும் தேவை என்பதால் அவரையே நாடுகிறோம். அவரைத் தவிர வேறு ஒருவரும் நமக்கு பொருட்டாக இருப்பதில்லை. போதை மருந்தை உட்கொண்டதை போல மதி மயங்கிப் போகிறோம்.

சில நேரங்களில், தவறானவர்கள் அல்லது நம் மீது உண்மையான அன்போ அக்கறையோ இல்லாதவர்கள் என்று அறிவுபூர்வமாக உணர்ந்தவர்கள் மீதும் கூட நமக்கு இப்படியான உணர்வு ஏற்படக் கூடும். அவரை விட்டு விலகி இருக்கும் போது அறிவு நமக்கு சில உண்மைகளை விளக்கும். தெளிவாகச் சிந்திப்போம். அந்த உறவை தொடர வேண்டாம் என்று கூட முடிவெடுப்போம். ஆனால் அந்த நபரை கண்டுவிட்டால் என்ன நடக்கிறது என்பதே நமக்குப் புரியாது. விட்டு விலகவே முடியாதோ என்ற மனநிலைக்குச் சென்று விடுகிறோம். என்ன நடந்தாலும் சரி என்று உறவைத் தொடர முடிவெடுக்கிறோம். அந்த நபரின் குறைகள், தவறுகள் அனைத்தும் மறந்து போகின்றன. அவர் ஏற்படுத்தும் கிளர்ச்சி மட்டுமே நினைவில் நிற்கிறது. நம்மால் விலக முடிவது இல்லை. இந்த உணர்வைப்

பெரும்பாலும் நாம் ஈர்க்கப்பட்ட நபர் மீது கொண்ட "உண்மைக் காதல், அதீத அன்பு" என்றெல்லாம் புரிந்து கொள்கிறோம். அதனால்தான் அவர்களின் குறைகள், தவறுகளை மீறியும் அவர்களை "நேசிப்பதாக" கற்பித்துக் கொள்கிறோம். ஆனால் உண்மையில் நாம் போதை பழக்கத்திற்கு அடிமையானது போல டோபோமைன் எனும் இரசாயனம் ஏற்படுத்தும் கிளர்ச்சிக்கு அடிமையாகி அந்த இரசாயனத்தை சுரக்கச் செய்யும் செயலை மீண்டும் மீண்டும் செய்ய நினைக்கிறோம் என்பதைத் தவிர அதில் வேறு ஒன்றும் இல்லை என்பது புரிந்தால், வெறுமனே உணர்வுப் பூர்வமாக மட்டும் முடிவெடுத்து நம் வாழ்வை இழக்காமல் அறிவு காட்டும் வழியில் யோசித்து சரியான முடிவை எடுப்போம்.

சரி. இந்த இரசாயனம் யாரை பார்த்தால் சுரக்கிறது. அது ஏன் குறிப்பிட்ட நபர்களை கண்டால் மட்டும் சுரக்கிறது. இதனை அடுத்த இதழில் காண்போம். இணைந்து பயணிப்போம்.. காதல் புரிவதோடு.. காதலைப் புரிந்து கொள்ளவும் செய்வோம்..

# கோட்சேவுக்கு கோயில் கட்ட எதிர்ப்பு
## 40 கிராம மக்கள் கூடும் மகா பஞ்சாயத்து



கோட்சேவுக்கு கோயில் கட்டும் முடிவை எதிர்த்து நாளை உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் 40 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பங்கேற்கும் 'மகாபஞ்சாயத்து' நடைபெறவுள்ளது.

மகாத்மா காந்தியை சுட்டுக் கொன்ற கோட்சேவுக்கு உ.பி.மாநிலம், மீரட் மாவட்டம் பிரம்மபுரி பகுதியில் சிலை அமைக்கப்படும். அந்த சிலை வைக்கப்படும் இடத்தில் கோயில் ஒன்றும் கட்டப்படும் என அகில பாரத இந்து மகாசபை அமைப்பின் தேசியப் பொதுச் செயலாளரான ஆச்சார்யா மதன் கடந்த புதன்கிழமை அறிவித்திருந்தார். இங்குள்ள சாரதா சாலையில் இந்த கோயிலுக்கான அடிக்கல் நாட்டு விழாவும் நடத்தப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

இதற்கிடையே, கோட்சேவுக்கு கோயில் கட்ட அனுமதிக்க மாட்டோம் என உத்தரப்பிரதேசம் மாநில நவ் நிர்மான் சேனா அறிவித்தது. இந்நிலையில், இவ்விவகாரம் தொடர்பாக அனைத்து தரப்பு மக்களின் கருத்தினை கேட்கும் வகையில் நாளை மகாபஞ்சாயத்து நடத்த உத்தரப்பிரதேசம் மாநில நவ் நிர்மான் சேனா ஏற்பாடு செய்துள்ளது. இந்த மகாபஞ்சாயத்தில் மீரட் நகரை சுற்றியுள்ள 40 கிராமங்களை சேர்ந்த ஏராளமான மக்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

கோட்சேவுக்கு கோயில் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்க விரும்பும் நபர்கள் மீரட் நகரில் இருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ரோட்டாவில் நாளை நடைபெறும் இந்த மகாபஞ்சாயத்தில் தங்களது கருத்துக்களை பதிவு செய்யலாம் என்று உத்தரப்பிரதேசம் மாநில நவ் நிர்மான் சேனா தலைவர் அமித் ஜானி தெரிவித்துள்ளார்.

கோட்சேவுக்கு கோயில் கட்டும் முடிவை எதிர்த்து நாளை அகில பாரத இந்து மகாசபை அலுவலகத்தின் முன்னர் தொண்டர்களுடன் திரண்டு சென்று போராட்டத்தில் ஈடுபடவும், உண்ணாவிரதம் மேற்கொள்ளவும் முடிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.




# பெரியாரும் கல்வியியலும்

கோ. தமிழ்ச்செல்வன்
மேச்சேரி
தமிழ்நாடு அறிவியல் மன்றம்



அனைவரும் கட்டாயக்கல்வி என்பதை அரசு 2010 ஆம் ஆண்டில் தான் கொண்டுவந்தது. ஆனால் பெரியாரோ

"கட்டாயக்கல்வி என்பதில் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கனுப்பாமல் இருக்கிற பெற்றோர்களுக்குத் தண்டனை விதிக்கச் சட்டம் செய்ய வேண்டும்'' என்றும்...... (விடுதலை 9.6.71)

**"கல்வி அறிவு, மனிதனை, மனிதத்தன்மையோடு வாழ்ந்து மற்ற மனிதனுக்கு உதவியாய் இருக்கப் பயன்பட வேண்டும்"**

என்னுடைய வாழ்நாளில் சுமார் 2 வருஷ காலந்தான் நான் பள்ளியில் படித்திருப்பேன். அவ்விரண்டு வருஷமாகிய எனது 8 வயதுக்கு மேல்பட்டு 11 வயதிற்குட்பட்ட காலத்தில் நான் பாடம் படித்த காலத்தைவிட உபாத்தியாயரிடம் அடிபட்ட காலந்தான் அதிகமாயிருக்கும். இந்த 2 வருஷ கெடுவிலேயும் என் கையெழுத்துப் போடத்தான் கற்றுக்கொண்டேன் என்று பெரியார் தனக்கே உரிய நகைச்சுவை உணர்வில் கூறுவதுண்டு.

மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும்பெற வேண்டும் என்று நினைத்த பெரியார் கல்வியியலிலும் தன் சிந்தனையை மக்களிடம் பரப்பினார். கல்வித்துறையின் போக்கையும், பாடத்திட்டங்களின் நிலையையும் பல்வேறு கோணங்களில் சிந்தித்து செயல்படுத்தினார் பெரியார். அப்படி கல்வி குறித்து பெரியார் பேசிய, எழுதிய கருத்துக்களை தொகுத்து வழங்கியுள்ளேன்.

"ஒரு நாட்டு மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமானாலும், அவர்கள் நாகரிகம் பெற்று உயர்ந்த நல்வாழ்க்கை நடத்த வேண்டுமானாலும் அரசியல், பொருளியல், தொழிலியல் ஆகிய துறைகளில் தகுந்த ஞானம் பெற வேண்டுமானாலும் அந்நாட்டு மக்களுக்கு முதலில் கல்வி ஏற்படவேண்டியதே முக்கியமாகும்.'' (குடிஅரசு, 26.12.37)

"கல்வி அறிவு, மனிதனை, மனிதத்தன்மையோடு வாழ்ந்து மற்ற மனிதனுக்கு உதவியாய் இருக்கப்பயன்பட வேண்டும்" (விடுதலை 25.1.47) என்றும்

"கல்வி மனிதனுக்குக் கற்பிக்க வேண்டிய அவசியமெல்லாம் ஒருவன் வாழ்நாளில் சுதந்திரத்தோடு வாழ்வதற்குத் தகுதிப்படுத்துவது" (குடிஅரசு 27.9.31) என்றும்

"கல்வியினுடைய குறிக்கோள் என்பது பணம் சம்பாதிப்பது மாத்திரம் என்று நினைக்கக்கூடாது. அறிவை வளர்க்க, நமது இழிவையும், முட்டாள்தனத்தையும் மூடநம்பிக்கையையும் ஒழிக்க என்பதாக இருக்க வேண்டும்".(விடுதலை 4.3.59) என்றும்

1925 ஆம் ஆண்டில் ஆசிரியர்கள் மாநாட்டில் "கல்விமுறை எப்படி இருக்க வேண்டும் என்றால், மாணவர்களைப் பார்த்து ஆசிரியர்கள்

கேள்வி கேட்பதை விட ஆசிரியர்களைப் பார்த்து மாணவர்கள் கேள்வி கேட்க வேண்டும். நூலகம் மற்ற அமைப்புகளின் மூலம் மாணவர்கள் படிக்க வேண்டும். இதிலே ஏற்படுகின்ற அய்யங்கள், இடர்ப்பாடுகள் இவற்றை அவர்கள் ஆசிரியரிடம் கேட்க வேண்டும்'' என்றார். அதுமட்டுமல்ல "புதிதாகப் புனைந்து, தானாக நினைத்து எதனையும் கண்டுரைக்கும் சொந்தச் சிந்தனையைச் சுரக்க வைக்கும் ஆற்றலாகக் கல்வி அமைய வேண்டும்" என்றார்.

கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது "படிப்பு அதிகமானால் இழிநிலை தானாக மாறும்; உயர்வு தாழ்வு தானே அகன்றுவிடும்; அனைவரும் சமம் என்ற வாய்ப்பு தானாகவே ஏற்பட்டுவிடும்'' (விடுதலை.2.11.64)

மேலும் "பிள்ளைகளை எல்லாம் தவறாமல் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைப்பதுதான் உங்கள் நிலையை மாற்றிக் கொள்ளும் ஒரே வழி. கல்வியறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் உங்களை உயர்த்தும்'' (விடுதலை 7.1.55) என்றார்.

நமது கல்விக் கூடங்கள் எல்லாம் அறிவியல் கூடமாக இருக்க வேண்டும் என்று விரும்பியவர் பெரியார்."மேலை நாடுகளில் உள்ள சர்வ கலாசாலை என்பவை உலகப் பொது அறிவு பண்டிதத் தன்மைக்குப் பயன்படுபவை யாக இருக்கும். பாடப்புத்தகங்களில் மூட நம்பிக்கைச் சாத்திரங்களோ, மதபக்திக் கலைகளோ ஆதிக்கம் செலுத்தாமல் இருக்கும் படியாய் இருக்கும், பகுத்தறிவையும், விஞ்ஞானத்தையும், அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும் என்றும் மேல்நாட்டுக்காரர்கள் படித்து அறிவின் காரணமாகப் புதுப்புது விஞ்ஞான சாதனங்களை, அதிசய அற்புதங்களைக் கண்டு பிடிக்கிறார்கள். நமது நாட்டில் படித்தவர்கள் முட்டாள்தனமாகக் கோவில் குட்டிச்சுவர்களைக் கொண்டு இருக்கிறார்கள்" (விடுதலை 5.5.1972) என்று வருத்தப்படுகிறார்.

மேலும் "மேல்நாட்டில் சரஸ்வதியை வணங்குவதில்லை. எழுத்துக்கள் நிறைந்த தாளில் மலம் துடைத்த போதிலும் கல்வியில் கருத்துடையவர்களாகயிருப்பதால் 100க்கு 90 பேர் படித்து அறிவாளிகளாக இருக்கிறார்கள். இங்குக் காகிதத்தைக் கண்ணில் ஒத்திக் கொண்டாலும் கல்வியை அலட்சியப்படுத்தி 100க்குத் 90 பேர் தற்குறிகளாக இருக்கிறார்கள். இது பற்றிச் சிந்திக்க வேண்டாமா?" (விடுதலை 17.5.63)

**கல்வியியல் சிந்தனையில் பெரியார் ஒரு முன்னோக்கராக விளங்கியுள்ளார். அவர் நாளைய வாழ்வு எவ்வளவு சிறப்புமிக்கதாக இருக்க வேண்டும் என்பதை நேற்றே சிந்தித்தவர்.**

என்றும் அறிவியல் கல்வியே இன்றைய சமூக மாற்றத்திற்கு வழிவகுக்கும் என்றார் பெரியார். பாடத்திட்டத்தைப் பற்றி பெரியார், 'பள்ளியில் படிக்கும் பொழுது ஏதாவது தெரிந்து கொள்ளலாமா என்றால் அங்குத் தமிழர்களைப் பற்றி ஒரு சேதியும், கிடையாது; எந்தவிதப் பாடப் புத்தகமும் கிடையாது; 'அரிவரி' பால பாடம் படிக்கும் போதும் அய்யர் - பிராமணன் போன்ற வார்த்தைகள் தாம் காணப்படுகின்றனவே அன்றித் தமிழர் - திராவிடர் என்கின்ற வார்த்தைகளுக்கு அங்கு இடமோ அவகாசமோ கிடையவே கிடையாது" (குடி அரசு 12.2.1944) என்கிறார்.

பாடப்புத்தகக் கமிட்டியையும் அய்யா விடவில்லை பாடப்புத்தகக் கமிட்டியில் உள்ள தமிழர்களுக்கு மான உணர்ச்சி, நாட்டு உணர்ச்சி இருக்குமானால் இராமாயண பாரதக் கதைகள், சரித்திரத்திலும் வசனப் பாடத்திலும் சேர்க்க சம்மதிப்பார்களா? பண்டிதர்கள், உபாத்தியாயர்கள், தமிழ்ச்செல்வர்கள் இக்குறைகளை எடுத்துக்காட்டுவதற்காக நம்மீது பாய்கின்றார்களே தவிர, புராண இதிகாசங்கள் அதுவும் தமிழர்களுக்குச் சம்பந்தமில்லாததும் தமிழர்களுக்கு இழிவைத் தரக்கூடியதும், தமிழர் முற்போக்கைத் தடுக்கக் கூடியதும், பகுத்தறிவுக்கு ஒவ்வாததுமான விஷயங்கள் கொண்ட இதிகாசங்கள் சமய ஆதாரங்கள் போலவும், புண்ணிய சரித்திரங்கள் போலவும் நம் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுவதைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை.

அதுமட்டுமல்ல தமிழர்களைப் பற்றிய வரலாறு இல்லாததைக் கண்டு பெரியார் "தமிழ் நாட்டுக்குச் சரித்திரமே இல்லை. இந்த தேச சரித்திரம் என்பதை எடுத்துக் கொண்டால் இராமாயண, பாரதமும், அசோகன் - மவுரியன் ஆட்சியும், முஸ்லீம், வெள்ளையர் ஆட்சியும்தாம் விளக்கப்படுமே ஒழிய சேர, சோழ பாண்டியரைப் பற்றியோ, திராவிடர் - தமிழர் ஆட்சியைப் பற்றியோ காண்பது மிகவும் அரிதாகும். அவை எந்த வகுப்புக்கும் பாடமாக இல்லை. அப்படி ஏதாவது எங்காவது காண முடிந்தால் அதில் பெரும் பித்தலாட்டமும், மோசடியும்தாம் காணப்படலாமே தவிர, யோக்கியமாய் சரித்திர ஆதார முறையாகக் காண்பதற்கு இடம் இல்லை" (குடிஅரசு.12.2.1944)

என்றும் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு முதலில் தன்மானக் கல்வியைத் தரவேண்டும். மனிதர்களின் நடத்தைகளைக் கண்டறியும் உளவியல் சிந்தனைகள் நிறைந்த கல்வியைத் தரவேண்டும் என்கிறார்.

பெண் கல்வி குறித்து பெரியார் "பெண்களைப் படிக்கக்கூடாது என்று ஏன் கட்டுப்பாடு ஏற்படுத்தினார்கள்? அவர்களுக்கு அறிவு இல்லை. ஆற்றல் இல்லை என்று சொல்லிச் சுதந்திரம் கொடுக்காமல் அடிமையாக்குவதற்காக" (குடிஅரசு 16.11.30) என்றார்.

"பெண்களுக்குப் படிப்பு, தொழில் ஆகிய இரண்டும் பெற்றோர்களால் கற்பிக்கப்பட்டு விட்டால் சொத்து சம்பாதிக்கும் சக்தி வந்து விடும்". (குடிஅரசு 16.11.1930) என்கிறார்.

"பெண்களுக்குப் பகுத்தறிவுக் கல்வியும், உலக நடப்புக்கல்வியும் தாராளமாகக் கொடுக்க வேண்டும்" (விடுதலை 22.3.1943) என்றும் "தங்கள் தங்கள் குழந்தைகளுக்கு நகை செய்து போடுவதற்குப் பதிலாகக் கல்வி செய்து வையுங்கள்" (குடிஅரசு 12.7.31) என்று வேண்டுகோள் வைக்கிறார்.

அதற்கும் மேலாக "இந்து மதத்தின் கல்வித் தெய்வமும், செல்வத் தெய்வமும், பெண் தெய்வங்களாக இருந்தும் இந்துமதக் கொள்கையின்படி பெண்களுக்குக் கல்வியும் சொத்துகளும் இருக்க இடமில்லையே ஏன்?" (குடிஅரசு 3.11.29) என்று ஆதங்கப்படுகிறார்.

தொழிற்கல்வியைப் பற்றி மிகவும் வலியுறுத்தி வந்தார். "ஒரு சமூகத்திற்குச் சுயமரியாதை வேண்டுமானால் தொழிற் கல்விதான் மிக்க அவசியமானது" (குடிஅரசு 16.1.27)

"நமது கல்விமுறை மாற வேண்டும். படிக்கும் போதே அதோடு தொழிலும் வளர வேண்டும். எந்த வகுப்பில் அவன் படிப்பை நிறுத்தினாலும் அவன் தொழில் செய்து பிழைக்கக் கூடியவகை இருக்க வேண்டும். மக்கள் அத்தனை பேரும் 100க்கு 100-ம் தொழில் புரிபவர்களாக இருக்க வேண்டும்". (விடுதலை 26.7.68) என்றும்

"தொழில் பயிற்சி மக்களிடம் ஏற்பட்டு விட்டால் மூட நம்பிக்கை உணர்ச்சியும் நல்ல அளவுக்குக் குறையும்" (விடுதலை 11.10.65) என்றார். "இன்றைக்குக் கல்லூரிப் படிப்பு, மனிதனுடைய அந்தஸ்துக்குத் தான் பயன்படுகிறதே ஒழிய, வாழ்க்கைக்குப் பயன்படவே இல்லை. எனவே கல்லூரிகளை இனிக் குறைத்துக் கொள்ளவேண்டும், தொழில் கல்விக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். எல்லோருக்கும் தொழில் கற்றுக் கொடுக்க வேண்டும்" (விடுதலை 3.1.72) என்றும்

## " பெண்களுக்குப் படிப்பு, தொழில் ஆகிய இரண்டும் பெற்றோர்களால் கற்பிக்கப்பட்டு விட்டால் சொத்து சம்பாதிக்கும் சக்தி வந்துவிடும்

"இந்தக் கல்விமுறை மாற்றி அமைக்கப் படவேண்டும்; தொழிற்கல்வியைப் பெருக்க வேண்டும். இதன் காரணமாகப் பரவலாக எல்லோரும் படிக்கவும், வேலை வாய்ப்புகள் பெறவும், தனியாகச் சுதந்திரமாகத் தொழில் செய்யவும் வாய்ப்புப் பெருகும். நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சி அடையும்" (விடுதலை 26.3.73) என்றார்.

கல்வியானது புதுமைமிக்கதாக இருக்க வேண்டு மெனில், அதில் மதச்சார்பும் மூட நம்பிக்கையும் கலவாது இருக்க வேண்டும் என்றார் பெரியார். "சிறுபிள்ளைகளுக்குக் கொடுக்கும் பாடப் புத்தகங்களிலேயே மூடநம்பிக்கை கொண்ட புராணக் கதைகள் புகுத்தப்படுகின்றன. இங்குக் கல்வி கொடுப்பவர்கள் இந்தக் கல்வியால் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்கோ, வாழ்க்கைக்கோ எவ்வளவு பயன்படும் என்பதை முக்கியமாய்க் கவனிப்பதில்லை" (பெரியார் ஈ.வெ.ரா மேல்நாடும், கீழ்நாடும் பக்கம்11) என்கிறார்.

1933ல் அரசினர் பெண்கள் பாடசாலையில் பெற்றோர்கள் தின விழாவானது ஈரோடு மகாஜன ஹைஸ் ஸ்கூல் சரஸ்வதி விழாவில் கொண்டாடப்பட்டது. அதில் கும்மி, கோலாட்டம், சிறு விளையாட்டு முதலியவைகளுடன் சாவித்திரி சத்தியவான் என்கின்ற ஒரு புராணக் கதை நாடகமாக சுமார் 10 வயது முதல் 16 வயதிற்குட்பட்ட அப்பள்ளிக்கூட மாணவிகளால் நடத்தப்பட்டது. அதைக் கண்டித்து,

"இவர்கள் எடுத்துக் கொண்ட புராணக்கதையின் முட்டாள்தனத்தையும், மூடநம்பிக்கையையும் குருட்டுபக்தியையும் வெளிப்படுத்தாமலும் அறிவு வளர்ச்சிக்காக படிப்பிக்கப்படும் பெண்களை இவ்விதம் பகுத்தறிவற்ற பிராணிகள் பிராயத்துக்கு

ஆளாக்கிவைப்பதைப் பார்த்து வருந்தாமல் இருக்கமுடியவில்லை என்றும் இனியாவது அருமையான ஞானமுள்ள இளங்குழந்தைகளை மிக்க போதனை சக்தியும், ஊக்கமும் உண்மை உழைப்பில் கவலையும் கொண்ட நமது கவர்ன்மெண்ட் பாடசாலை உபாத்தியாயர்கள் பகுத்தறிவுக்கு ஒத்ததும் அனுபவத்திற்கு ஏற்றதுமான விஷயங்களில் பாடுபட்டு பிள்ளைகளை முன்னுக்கு கொண்டுவர வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். பகுத்தறிவிலும் பெண்களது உண்மையான முன்னேற்றத்திலும் கவலை கொண்டவர்கள் இதை எடுத்துக்காட்டாமல் இருக்கக்கூடாது" (குடிஅரசு 12.3.1933) என்று கவலைப்பட்டார்.

சமயம் சாராக் கல்வி வேண்டுமென விரும்பினார் "உலகக் கல்வி வேறு, பகுத்தறிவு வேறு, பட்டம் வேறு, பெரிய டாக்டராய் இருப்பான் ஆனால் அவனும் மூத்திரமும், சாணியும் சாப்பிட்டால் மோட்சத்திற்குப் போகலாம் என்று நினைப்பான். பெரிய வான சாஸ்திர நிபுணனாக இருப்பான். அவனும் தன் இறந்த தந்தைக்கு (திதி மூலம்) அரிசி, பருப்பு, காய்கறி, செருப்பு அனுப்புவான். அவனும் தன் மனைவியையும், மக்களையும் வீட்டுக்குத் தூரம் என்று வீட்டுத் திண்ணையில் தள்ளி மூடி வைத்துவிட்டு உள்ளே தாழ்ப்பாள் போட்டுத் தூங்குவான்".

மதம் சார்ந்த கல்விதான் டாக்டரையும், பட்டதாரிகளையும் இச்செயலில் ஈடுபடுத்துகிறது. இக்கல்வி முறையை மாற்றி அறிவியல் ஆக்கம் நிறைந்ததாக உருவாக்கினால் மக்கள்படும் தொல்லை நீங்கும் எனக் கருதினார்.

1937 ஆம் ஆண்டு பெரியார் சிந்தித்து வெளியிட்ட இக்கருத்தினை எதிரொலிக்கும் வகையில் 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 ஆம் நாள் பாராளுமன்றத்தில் கல்வியின் அறைகூவல் - ஒரு கொள்கைக் கண்ணோட்டம் (Challenges of Education-A Policy Perspective Status report / 1985 Aug 20) என்னும் நிலை விளக்க அறிக்கை ஒன்றினை அரசு சமர்ப்பித்தது. இதில் அடங்கிய கருத்துகள் மீது நாடு தழுவிய அளவில் பரவலான விவாதம் தோன்றியது. இறுதியில் வெளியான அறிக்கையில் கல்வியானது எவ்வாறு இருக்க வேண்டும் என வெளியிட்டது.

அதில் "கல்வியானது நிகழ்காலத்திற்கும், எதிர்காலத்திற்குமாக ஓர் இணையற்ற கல்வி அனைவருக்கும் தேவையான ஒன்று. சமத்துவம் சமயச்சார்பின்மை, ஜனநாயகம் போன்ற அரசியல் சட்டத்தில் காணப்படும் உயரிய குறிக்கோளுடைய கல்வியே உகந்த வழி;

மேலும் நம் பொருளாதாரத்தில் பல்வேறு நிலைகட்கும், பிரிவுகட்கும் தேவையான தேர்ந்த மனித சக்தியை உருவாக்கி வழங்கக்கூடியது கல்வி மட்டுமேயாகும் என்று குறிப்பிட்டுள்ளது. இதனை நோக்குமிடத்து கல்வியியல் சிந்தனையில் பெரியார் ஒரு முன்னோக்கராக விளங்கியுள்ளார். அவர் நாளைய வாழ்வு எவ்வளவு சிறப்புமிக்கதாக இருக்க வேண்டும் என்பதை நேற்றே சிந்தித்தவர்.

அதுமட்டுமல்லாமல் அனைவரும் கட்டாயக்கல்வி என்பதை அரசு 2010 ஆம் ஆண்டில்தான் கொண்டுவந்தது. ஆனால் பெரியாரோ "கட்டாயக்கல்வி என்பதில் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கனுப்பாமல் இருக்கிற பெற்றோர்களுக்குத் தண்டனை விதிக்கச் சட்டம் செய்ய வேண்டும்" (விடுதலை 9.6.71) என்றும்,

"என்னைக் கேட்டால் இந்த குடிநீர்த் திட்டமும், சாக்கடைத் திட்டம் கொஞ்ச நாளைக்குத் தள்ளிப்போட்டாவது 100க்கு 80 பேராக, படிக்காதத் தற்குறிகளாக உள்ள நிலையினைப் போக்கும் வகையில் கல்வி அளிக்க வேண்டும்" (விடுதலை 20.4.1961) என்று கூறுகிறார்.

அதற்கும் மேலாக "ஆறு மாதத்திற்குள் கையெழுத்து போடத் தெரிந்து கொள்ளாதவர்களுக்கெல்லாம் (எழுதப்படிக்கத் தெரிந்து கொள்ளாதவர்க்கெல்லாம்) மூன்று மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று சட்டம் போட்டால் அவரவர்கள் விழுந்து விழுந்து படிக்க மாட்டார்களா?" (விடுதலை 4.9.50) என்று அப்போதே சொன்னவர்.

தேர்வுமுறை பற்றி கல்வியாளர்கள் தேவையில்லை என்று தற்பொழுது கருத்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பெரியாரோ "பள்ளிக் கூடங்களில் கல்வி அறிய விரும்பும் மக்களுக்குப் பரீட்சை என்பது ஒரு மாபெரும் கேடான காரியம் என்பது எனது கருத்து" (விடுதலை 3.12.48) என்றும்

"கல்வி என்பது விசயங்களை - எந்த விசயங்களையும் புரிந்து கொள்ளும்படியான ஆற்றல் பெறுவதே தவிரக் கற்பித்தவற்றை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பதல்ல" (விடுதலை 3.12.48) என்றும்

"உருப்போட்டு ஒப்புவிப்பது என்பதே எந்தப் படிப்புக்கும் பரீட்சை முறையாக இருக்கக்கூடாது அப்படியானால் அர்ச்சகனும், புரோகிதனும்தான் ஒப்புவிக்கமுடியும்" (குடிஅரசு 22.5.48) என்றார்.

ஆசிரியரைப் பற்றித் குறிப்பிடும்பொழுது "ஆசிரியர்கள் இம்மாதிரி மகாநாடுகள் கூடிப் பேசுவதும், தீர்மானிப்பதும் அவர்களுக்குச் சில சவுகரியத்தை உண்டாக்கிக் கொள்ளவும் தங்கள் சம்பளத்தை அதிகப்படுத்திக் கொள்ளவு மேயல்லாமல் தங்களால் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங்குப்படுத்திக் கொள்ளவோ, தேசம் முன்னேற்றத்திற்கு அனுகூலமான கல்வியைப் போதிக்கும் சக்தியையடையவோ ஒரு பிரயத்தனமும் செய்ததாக நான் அறியவில்லை.

முதலாவது நீங்கள் படித்த கல்வியும் நீங்கள் கற்றுக்கொடுக்கப்படும் கல்வியும் வயிற்றுப் பிழைப்புக்கு ஒரு ஆதார மாகக் கருதிக் கற்கவும் கற்பிக்கப்படவும் ஏற்பட்டிருக்கிறதே யல்லாமல் மக்கள் அறிவுத் தத்துவத்திற்கோ, தேசத்திற்கோ, ஒழுக்கத்திற்கோ ஒரு பலனையும் அளிக்க முடியாததாயிருக்கிறதென்பது நீங்கள் அறிந்த விஷயமேதான். ஆரம்பக் கல்வி முதல் உயர்தரக்கல்வி, சகலகலா கல்வி என்பது வரையிலும் கவனித்தால் தற்காலம் அடிமைத் தன்மையையும் சுயமரியாதையற்ற தன்மையையும் உண்டாக்கிக், கொடுமையான ஆட்சிமுறை கொண்ட ஒரு அரசாங்கத்திற்கு உதவி செய்து வயிறு வளர்க்கும் தேசத்துரோகிகளை உற்பத்தி செய்யும் இயந்திரங்களாகத்தானே, இருக்கிறதேயல்லாமல் வேறென்ன இருக்கிறது?" என்று 1927ஆம் ஆண்டு போளூர் ஆரம்ப ஆசிரியர் மாநாட்டில் பேசியவர் பெரியார்.

அதுமட்டுமல்ல 19.5.28 அன்று பூந்தமல்லி கண்டோன்ட்மெண்ட் கட்டிடத்தில் நடந்த செங்கல்பட்டு ஆரம்ப ஆசிரியர் மாநாட்டுத் தலைமை உரையில் "நான் அறிந்த வரையில் தற்கால ஆசிரியர்கள் என்கின்றவர்கள் ஒருவிதத் தொழிலாளிகளே. அதாவது ஜீவனத்திற்காக வேலையோ கூலியோ செய்கின்ற மக்களைப் போல் வயிற்றுப் பிழைப்புக்காரர்களேயல்லாமல் உண்மையான ஆசிரியத் தன்மையுடையவர்கள் அல்ல என்பதே எனது அபிப்பிராயம்" என்றவர்.

ஆசிரியர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று நினைத்த பெரியார் "பெரியவர்கள் முன்னோர்கள், சொன்னார்கள் என்பதையே மாணவர்கள் காதில் போடக் கூடாது. உன் அறிவைக் கொண்டு பார் நடப்பைக் கொண்டு பார் என்று சொல்ல வேண்டுமே தவிர 2000, 3000, 5000 வருடங்களுக்கு முன்னிருந்தவன் சொன்னதை வைத்துப் பார் என்று சொல்லக்கூடாது" (விடுதலை 26.7.68) என்றும்

"ஆசிரியன் பள்ளிக்கூடத்தில் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது கிரகணம் எப்படி உண்டாகிறது என்பதை விஞ்ஞான அறிவு கொண்டு விளக்குவான். ஆனால் அதே ஆசிரியன் வீட்டுக்குப் போய்ப்பார்த்தால் கிரகணத்தினால் தோஷம் ஏற்படாமலிருக்க மூக்கைப் பிடித்து கொண்டு மந்திரம் செபிப்பான். ஆசிரியர்கள் விளக்கு ஏற்றி வைப்பது இருளைப் போக்க என்று கூற வேண்டுமேயொழிய விழுந்து கும்பிட அல்ல என்று கற்பிக்க வேண்டும்" (விடுதலை.1.12.61) என்றும்

"ஏட்டுப் படிப்பை மட்டும் மாணவர் களுக்கு ஆசிரியர்கள் புகட்டுவதால் நம் தமிழ் மக்கள் முன்னேற முடியாது. பகுத்தறிவு உணர்ச்சி களையும் புரட்சிக் கருத்துக்களையும் தன்நாடு, தன்மொழி, தன்இனம் என்ற தன்மான உணர்ச்சியையும் ஊட்ட வேண்டும்" (விடுதலை 3.4.56) என்றும் "பெருமை மிக்க ஆசிரியர்கள் நமது பிள்ளைகளை மதவாதியாக்க வேண்டுமென்று கருதுவதை விட அறிவாளிகளாக்க வேண்டுமென்று பாடுபட வேண்டும்" (விடுதலை 16.12.69) என்றார்.

மாணவர்களைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது "நீங்கள் இந்தப் பருவத்தில் பயிலுவதிலேயே நாட்டம் செலுத்த வேண்டும். இதைத் தவிர வேறு ஏதாவது வேலை வேண்டும் என்றால் பகுத்தறிவு கொண்டு எதையும் சிந்தித்துப் பழக வேண்டும்" (விடுதலை 23.3.68) என்றும்

"நம் மாணவர்களிடையே கட்டுப்பாடு, ஒழுக்கம் இருக்க வேண்டும். பகுத்தறிவை மறந்து விடாதீர்கள். எந்தக் காரியமானாலும் எவ்வளவு முக்கியமானாலும் எந்த நிலையிலிருந்தாலும் ஏன்? எதற்கு? எதனால்? என்று சிந்தித்துப் பார்த்து எதையும் செய்ய முற்படுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்"(விடுதலை.12.11.68) என்றும்

"ஒவ்வொரு மாணவரின் இலட்சியமும் தான் மனிதனாகப் பிறந்தது மனிதச் சமுதாயத்திற்குத் தொண்டாற்றுவதற்காக என்றிருக்க வேண்டும்". (விடுதலை.20.12.72) என்றார்.

எழுத்தறிவினை நூற்றுக்கு நூறு காண இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் 1950 ஆம் ஆண்டிலேயே வழிவகை செய்யப்பட்ட போதும் 30 ஆண்டுகளுக்கு மேலாகக் கல்வியாளர்களும், அரசியலாளர்களும் மறந்திருந்த 'நிகர் வாய்ப்பு' 'நிகர் உரிமை' என்பன 1986 ஆம் ஆண்டு கல்விக் கொள்கையில்தான் 'Equity of access' என உணரப்பட்டது. இதை தந்தை பெரியார் 1925 ஆம் ஆண்டிலேயே எடுத்துரைத்துள்ளார்.

கல்வியியல் குறித்து பேசியும் எழுதியும் வந்த பெரியார் செயலிலும் செய்துகாட்டினார். 24.08.65 இல் தந்தை பெரியார் அவர்கள் தமிழரினக் கல்வி வளர்ச்சிக்கு நன்கொடையாக ரூ.5.5 லட்சம் பணம், கட்டடம் நிலமாக அளித்ததை ஏற்று, அரசினரால் ‘பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி’ என்ற பெயரில் திருச்சி காஜாமலைப் பகுதியில் கலெக்டர் கோ.சொக்கலிங்கம் தலைமையில் முதலமைச்சர் பக்தவச்சலம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அழைப்பிற்கிணங்க தந்தை பெரியாரும் கலந்து கொண்டார்.




# பள்ளிப்பாடத்தில் பகவத் கீதை

மத்திய வெளியுறவுத்துறை மந்திரி சுஷ்மா சுவராஜ், பகவத் கீதையை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்தார். இந்நிலையில், ஹரியானாவிலுள்ள பள்ளிகளில் 5-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை அடுத்த கல்வி ஆண்டு முதல் பகவத் கீதையை பாடமாக சேர்க்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இதுபற்றி ஹரியானா கல்வித்துறை மந்திரி ராம் பிலாஸ் ஷர்மா கூறுகையில், ‘பகவத் கீதை வாழ்க்கையை எப்படி மகிழ்ச்சியாக வாழ்வது என்பதை சொல்லிக் கொடுக்கிறது. மனஅழுத்தத்தை போக்கும் வழிகளை கற்றுக் கொடுக்கிறது.

கீதையை வயதானவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று ஒதுக்கி விட முடியாது. வாழ்க்கை முழுவதும் ஒருவர் கீதையை வழிகாட்டியாக படிக்க தகுந்தது. கீதைதான் நமது வாழ்க்கை முறை. கீதையே நமது அறிவியல். கீதையே நமது பிரச்சனைகளுக்கு தீர்வு.’ என்றார்.

# எங்கள் பெயருக்கு இணையாக ஒரு தலித்தின் பெயரா?

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூரின் மிக அருகில் உள்ள மணல்மேல்பட்டி என்ற பஞ்சாயத்தின் தலைவர் சின்னைய்யா. இவர் ஒரு தலித். மணல்மேல்பட்டி கிராமத்தில் உள்ள அந்தராநாச்சியம்மன் கோவிலுக்கு கருவூலம்போல் செயல்படுவதற்காக ஒரு இணைப்புக் கட்டிடம் கட்டமுடிவு செய்யப்பட்டது. அதற்கான நிதிதிரட்டல் பணிகள் தொடங்கின. அதற்காக ஒரு துண்டறிக்கை அச்சிடப்பட்டது. அதில், 5000 ரூபாய்க்குமேல் நன்கொடை அளிப்பவர் களைப் பெருமைப்படுத்தும் வகையில், கோவிலில் நிறுவப்பட உள்ள சலவைக்கல்லாலான பெயர்ப்பலகையில் அவர்களின் பெயர் பொறிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

செல்வசெழிப்போடு வாழ்ந்துவந்த சின்னைய்யா ரூ.11,101 அய் நன்கொடையாக வழங்கினார். துண்டறிக்கையில் குறிப்பிட்டிருந்ததுபோல, அவர்பெயரும் பெயர்ப்பலகையில் பொறிக்கப் பட்டது. ஆனால் அதனை தலித் அல்லாதவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்களில் பலர் சின்னைய்யாவை அணுகி, "எங்கள் பெயர்களோடு உங்கள் பெயர் பலகையில் இடம்பெறுவதை நாங்கள் விரும்பவில்லை; எனவே உங்கள் பெயரை அகற்றப்போகிறோம்" என்றுகூறினர்.

சின்னைய்யா காவல்நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்தார். ஆனால் காவல் துறையினர் எப்.ஐ.ஆர் கூட பதியவில்லை. எனவே, அவர் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வை அணுகினார். அதன்பின், காவல்துறையினர், கிராமத்தில் இருக்கும் ஐந்துபேர் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ்வழக்கு பதிவு செய்தனர். எனினும், அவரது பெயர் ஒரு இயந்திரத்தின் மூலம் பெயர் பலகையிலிருந்து அழிக்கப்பட்டது.

# சாதியற்ற பாலின பேதமற்ற தமிழ்ச் சமூகம் அதுவே இலக்கு...

கோவையில் புதிய குரல் 5-வது சந்திப்பு 2014 டிசம்பர் 27.28 ல் எழுச்சியோடு சங்கமித்தது. குடும்பங்களாகவும், தனியாகவும் சென்னை, வேலூர், கோவை, சேலம், மேட்டூர், திருப்பூர், திருச்சி. திண்டுக்கல், சிவகங்கை, காரைக்குடி, புதுக்கோட்டை, மதுரை மற்றும் நாகர்கோவில் ஆகிய ஊர்களிலிருந்து தோழர்கள் வந்திருந்தனர். வழக்கம்போல் பெண்களின் எண்ணிக்கையே அதிகம்.

முதல்நாள் காலை 10 மணிக்கு தன்னறிமுகத்துடன் நிகழ்வு துவங்கியது. அடுத்து தோழர் கீதாஇளங்கோவன் அவர்கள் இயக்கிய “மாதவிடாய்” ஆவணப்படத்திற்காக அவருக்கு “சாதனைத்தமிழர்” விருது புதியகுரல் சார்பில் வழங்கப்பட்டது தோழர் பாசறை பாலன், பேரா.அரச.முருகுபாண்டியன் இருவரும் மேடையில் விருதினை வழங்கினார்கள்.

புதியகுரல் சந்திப்புக்கு வந்திருந்த குழந்தைகளை மதுரை கலீலியோ அறிவியல் மன்றத் தோழர் சத்தியமாணிக்கம் கவனித்துக் கொண்டார். தொடந்து, தோழர்.யாழினி அவர்களின் “தமிழக இசைவரலாறு” ஆய்வுச் சொற்பொழிவு, பாடல்களுடன் செவிகளுக்கு தேனாய் இனித்தது. அடுத்து, “தமிழகத்தின் ஆட்சிக் காலக்கட்டங்கள்” எனும் தலைப்பில் விவாத அரங்கம் துவங்கியது. இதற்காக, தோழர்.ஓவியா உருவாக்கிய கணினிக் காட்சி (power point presentation) திரையிடப்பட்டது. இது விவாத அரங்கிற்கு உதவும் நல்ல கருவியாய் அமைந்தது. புதிய குரல் தோழர்களால் கட்சிச் சார்பின்றி தமிழர்நலன் நோக்கில் விவாதம் நடைபெற்றது.

மதிய உணவு திருநங்கைகளால் சமைக்கப்பட்ட பிரியாணி வழங்கப்பட்டது. மாலை நிகழ்வில், கோவை பாம்புகள் நலச் சங்கம் “பாம்புகள் விழிப்புணர்வு” பற்றி செய்முறை விளக்கத்திற்கு பாம்புகளுடன் வந்து அச்சத்தைப் போக்கினர். அதன்பிறகு புதியகுரலுக்கு வந்திருந்த சிறுவர், சிறுமியர், பெண்கள் உள்ளிட்ட அனைவரும் பாம்புகளுடன் விளையாடினர்.


சென்னைத் தோழர்.பாசறை பாலன் அனைவருக்கும் பாசறை இதழ்களை இலவசமாக வழங்கினார். திருச்சித் தோழர். அரசெழிலன் மாதவிடாய் குறுவட்டு,திருக்குறள் இசைப்பாடல் குறுவட்டு, நாளைவிடியும் இதழ் மற்றும் ‘அகமணம் அகற்றுவோம்’ என்ற சிறுவெளியீடு உள்ளிட்ட சில சிறுவெளியீடு களையும் அனைவருக்கும் இலவசமாக மகிழ்வுடன் வழங்கினார். மும்பை தோழர். குமணராசன் எழுதிய நூற்கள் வந்திருந்த இளைஞர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. (தோழரால் மும்பையிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டவை)

இறுதியாக, சூலூர் செந்தலை ந.கவுதமன் அவர்கள் தொகுப்புரை வழங்கினார். அவரது உரை,தமிழக வரலாற்றை எளிமையாகவும், ஆழமாகவும் விளக்கியது. தனது உரையை திறந்த புத்தகமாக, வெளிப்படையாக பல்வேறு உண்மைகளை முன்வைத்து அறிவு விருந்தினை அளித்தார்.

இரண்டாம் நாள் நிகழ்வு ஆழியார் அணை சுற்றுலாவில் இனிதே கழிந்தது. மாலை அணையில் உள்ள பூங்காவில், நடைபெற்ற நிகழ்வுகள் பற்றிக் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இருநாட்களுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்த தோழர்கள் சாந்தகுமார் - இலதா குடும்பத்தினரை அனைவரும் பாராட்டினர். அடுத்த நிகழ்வு வரும் மே மாதம் சென்னை அல்லது ஏற்காட்டில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

**தகவல்: எழில்அமுதன்**





# பாசக்கீரைகள்

ம.தி.முத்துக்குமார்



"மட்டன்..

எப்படித்தான் இந்தக் கறியெல்லாம் சாப்பிடுறீங்களோ.. உவ்வேவ்.."

என்று ஒழுங்கு காட்டினாள் மாமி.

தினவெடுத்துப் பல்கிப் பெருகிய உயிர்செல்களால் அந்தச் சிறு கூட்டுக்குள் தன் உடலை அடக்க முடியவில்லை. தன்னை மூடியிருக்கும் அந்தத் தோலை முட்டி மோதி கிழிக்கப் பார்த்தது. நீர் பாய்ச்சப்பட்டு ஈரப்பதத்தோடு இருந்த தோல், 'கிழிபடுவதற்கு நான் தயாராக இருக்கிறேன். கிழிக்கும் சக்தி உனக்கிருந்தால்' என்று சொல்லாமல் சொல்லியது. அது முட்டிப் பார்க்கும் தன் இலைகளைக் கொண்டு லேசாகக் கீற, அதுவரை தன் உடல்கருவை பாதுகாத்து வந்த அந்த தோல் லேசாக கிழிபட்டது. அந்த கிழிசலினூடே தன்னுடைய இரண்டு இலைகளையும் வெளியே நீட்டி விரிக்க அந்தத் தோல் இரண்டாகக் கிழிபட்டு கீழே இறங்கியது. இலைகளை நீட்டி மண்ணுக்கு வெளியே எட்டிப் பார்த்தது அந்த இளந்தளிர். அதிகாலை கதிரவன் தன் ஒளியைப் பாய்ச்சி அந்தத் தளிருக்கு கிளர்ச்சியை உண்டாக்கியது. மெதுவாக வீசிய காற்று அந்த மெல்லிய இலைகளைத் தடவி தனது வரவேற்பைத் தெரியப்படுத்தியது.

தன் வேர்களுக்குக் கீழே ஏதோ குளிர்ச்சியாக ஒன்று பரவ கீழே குனிந்து பார்த்தது அந்த இளந்தளிர். கீழே நீளமாக வெட்டி வைத்திருந்த பாத்திகளில் சிறிய ஓடை போல் நீர் வேக நடை போட்டு வந்தது. இதற்குத்தான் ஆசைப்பட்டுக் காத்திருந்தது போல், அந்தத் தளிர் தன் வேர்களால் நீரை உறிஞ்சிக் குடித்தது. முளைத்த நாளில் முதல் வேளை உணவை முடித்த திருப்தியில் அது தன்னைச் சுற்றும் முற்றும் பார்த்தது. இருப்பதிலேயே சற்று மேடான பகுதியில் முளைத்ததனால் அந்தத் தோட்டத்தில் இருக்கும் எல்லாவற்றையும் பார்க்க முடிந்தது.

அந்த பாத்தி நெடுகிலும் தன் அளவிலும் தன்னைவிட சிறிய அளவிலும் பல தளிர்கள் முளைத்துக் கிடந்தன. புதிதாக முளைத்த இந்தத் தளிர்களும் இந்த உலகை வியப்போடு பார்த்தபடி இருந்தது.

அவற்றை சகோதரப் பாசத்தோடு பார்த்த இந்தத் தளிருக்கு ஒரு கேள்வி எழுந்தது. இவர்களெல்லாம் என் சகோதரர்கள் என்றால், என் அம்மா எங்கே?

"ஏ மாமி.. உன் வீட்டு விசேசத்துக்கு நான் வந்திருக்கேன்.. என் வாயைக் கிளராதே.. அது உனக்கு நல்லதில்லை.." எச்சரித்தாள் சரோஜா.

"உசுரோட இருக்கிற ஆட்டையும், கோழியையும் பாருடி.. அதைத் தொட்டுத் தடவி.. கொஞ்சிப் பாரு.. அதுங்க உன் புள்ளைங்க மாதிரி தெரியும்.. அப்புறம் அந்த அசைவம் சாப்பிடுற எண்ணமே வராது.."

சரோஜா பேசாமல் மாமியையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"உசுரைக் கொல்றது பாவம்டி.. அதுவுமில்லாம சையன்டிபிக்கா அசைவம் நம்ம உடம்புக்கு ஒத்துக்காது.. நீ சைவத்துக்கு மாறிடு.. உடம்பு ஆரோக்கியமா இருக்கும்.."

சரோஜா சிரித்துக் கொண்டே சொன்னாள், "சும்மா நடிக்காதே மாமி.. நாங்கெல்லாம் ஒரு உயிரைக் கொன்னு நூறு பேரு பங்கு போட்டுக்குறோம்.. நீங்க மட்டுமே தனியா ஆயிரக் கணக்கான உயிரைக் கொல்லுறீங்களே.."

"என்னடி ஒளர்றே.."

"நான் ஒளர்லடி..நீ சயன்டிபிக்குன்னு சொன்னியே.. அதுப்படித்தான் சொல்றேன்.. ஒவ்வொரு செடிக்கும் உயிர் இருக்குன்னு நம்மநாட்டு விஞ்ஞானி ஜகதீஷ் சந்திரபோஸ் நிரூபிச்சிருக்கார்.. இது அறிவியல் உண்மை.. நீயும் நானும், ஆடும் மாடும் நடமாடுற உயிரினங்க.. தாவரங்கள் எல்லாம் நடமாட முடியாத மண்ணுல ஊன்றி வாழுற உயிரினங்க.. நடமாட முடியாததாலேயே அதை உயிரினம் இல்லேன்னு சொல்லாதே.. அது அறிவியலுக்கு எதிரானது.. இதோ இந்த கீரைக் கட்டுகளைப் பாரு.. இதுல ஆயிரம் கீரைச் செடி இருக்குமா?.. ஒவ்வொரு செடிக்கும் உயிர் இருக்கு.. அப்படின்னா ஆயிரம் உயிரை நீ கொல்றே.."

தனக்கும் உயிர் உண்டு என்ற உண்மையைச் சொன்ன சரோஜாவை வியப்போடு பார்த்தது அந்தச் செடி. கோபத்தோடு முறைத்தாள் மாமி.

"ஏன்டி கொழப்புறே.. ஐயோ நாராயணா.. இவளைப் போயி என் பிரண்டா படைச்சிட்டியே"

"கீரையை விடு.. இதோ முளை கட்டிவெச்ச பச்சைப் பயறு.. பயறாவே இருந்தாக்கூட அதை ஒரு விதைன்னு சொல்லிடலாம்.. ஆனா அதை மொளப்பு கட்டி வெச்சி அத்தனை பயருக்கும் உயிர கொடுத்து வெச்சிருக்கே.. இதை எண்ணிப் பார்த்தா ஒரு பத்தாயிரம் வருமா?.. அடுத்து இந்த உயிரையெல்லாம் ஒட்டுமொத்தமா எடுக்கப் போறே.. எவ்வளவு பெரிய கொலைகாரிடி நீ.." என்று மாமியைப் பார்த்து கிண்டலாகச் சொன்னாள் சரோஜா.

மாமி சரோஜாவைப் பார்த்து முறைத்தாள்.

"ஏன்டி மொறைக்கிறே.. நீயும் அறிவியல்ன்னுதான் சொன்னே.. நானும் அறிவியலைத்தான் சொன்னேன்.. யோசிச்சுப் பாருடி.. அறிவியல்ன்னா உண்மை.. கண்ணு தெறந்திருந்தா மட்டும் போதாது.. உண்மையைப் பார்க்கணும்.."

வேலியில போன ஓணாண எடுத்து வழுக்கட்டாயமாய் மடியில விட்டுக் கொண்டோம் என்று தோன்றியது மாமிக்கு. அறிவியலை யோசிக்க முடியவில்லை. இவள் வாயை எப்படி அடைப்பது என்று கண்களை மூடி யோசித்தாள்.

"நீ உண்மையைப் பார்க்க மாட்டேன்னு எனக்கு நல்லா தெரியும்.. ஒண்ணு மட்டும் புரிஞ்சுக்கடி... நம்ம உடம்பைப் பொறுத்தவரைக்கும் நாம சாப்பிடறது ஆடா, கோழியா, கீரையாங்கிற பாக்காது.. கால்சியமா.. புரோட்டீனா.. விட்டமினான்னுதான் பார்க்கும்.. இதுதான் அறிவியல்.."

"ஏய் பேசாதே.. இனிமே ஒரு வார்த்தை பேசினே.. நான் உண்மையிலேயே கொலைகாரியாயிடுவேன்.."

"உண்மையிலேயே நீ கொலைகாரிதான்.. உயிரைக் கொன்னா கொலைகாரின்னா.. நீயும் கொலைகாரிதான்.. நானும் கொலைகாரிதான்.. நான் அசைவக் கொலைகாரின்னா..

நீ சைவக் கொலைகாரி.. உண்மையைச் சொல்லப்போனா இங்கே சைவம் அசைவங்கிறதே கெடையாது.. ஒரு உயிரை எடுத்துத்தான் இன்னொரு உயிர் வாழ முடியும்ங்கிறது இயற்கையோட நியதி.. அதை நீயும் செய்யிறே நானும் செய்யிறேங்கிறதுதான் உண்மை.. அதனால நீங்க எல்லாம் உயிரையே கொல்லாத அன்புமயமானவங்க.. நாங்கெல்லாம் உயிரை கொல்லுற அரக்கனுங்கன்னு வேசம் போடாதேன்னுதான் சொல்றேன்.."

மாமியால் எதுவும் பேச முடியவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"ஏய்.. ரிலாக்ஸ்.. நீதான் பிரச்னையை தொடங்கி

வெச்சே.. நான் முடிச்சிட்டேன்.. இனிமே ஒரு வார்த்தையும் இதைப் பத்தி பேசமாட்டேன்.. வா பங்சன் வேலையை கவனிப்போம்..” என்று சொல்லி மாமியை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றாள்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை அரை மயக்கத்தில் கேட்டுக் கொண்டிருந்த அந்தச் செடி. அந்தப் பெண்மணி பேசியது தனக்கு ஆதரவாகவா அல்லது எதிராகவா என்று புரியவில்லை. ஒன்று மட்டும் புரிந்தது. தான் இன்னும் கொஞ்சம் நேரத்தில் கொல்லப்பட்டுவிடுவோம் என்பதுதான் அது.

எல்லா கட்டுகளையும் அறுத்துவிட்டு கடைசியாக அந்தக் கட்டை எடுத்து அவிழ்த்தார் சமையல்காரர். அந்த செடியை எடுத்து நான்கைந்து செடியை வைத்தார். ஒரு கையில் தண்டையும் மறு கையில் வேரையும் பிடித்தபடி அறுப்பதற்காக அரிவாள்மனை மீது வைத்தார்.

“அங்கிள் ஒரு நிமிஷம்.. இந்த கீரைச் செடியைக் கொஞ்சம் காட்டுங்களேன்..” என்று மாமியின் மகள் சிறுமி ஐஸ்வர்யா சொன்னாள். அறுப்பதை நிறுத்திவிட்டு கையிலிருந்த கீரைச் செடியைக் காட்டினார் சமையல்காரர். அவர் கையில் இருந்த கீரைகளில் செழிப்பாய் இருந்த அந்தச் செடியை எடுத்துக் கொண்டு ஆசையோடு பார்த்தாள் அந்தச் சிறுமி.

“இந்த கீரையை வெச்சி என்ன பாப்பா செய்யப் போறே.."

“அங்கிள் இந்த கீரையை நட்டு வளர்க்கப் போறேன்.. இது பெரிசான பின்னாடி இதிலிருந்து விதையை எடுத்து நான் பயிர் பண்ணுவேன்..” என்று சொல்லிவிட்டு அந்தச் செடியை எடுத்துக் கொண்டு தோட்டத்திற்கு ஓடினாள்.

தன் உயிர் காப்பாற்றிய அந்தச் சிறுமியை ஒரு வினாடி நன்றியோடு பார்த்தது அந்தச் செடி. அடுத்த வினாடியே அந்த செடிக்குத் தாயின் வேதனை கண்முன் நின்றது.

சிறுமியிடம் கெஞ்சியது.

“வேண்டாம் பாப்பா.. இப்பவே என்னைக் கொன்னுடு.. நான் அம்மாவாகி என் பிள்ளைங்களெல்லாம் என் கண்ணு முன்னாடியே சாகறதை என்னால பார்த்துட்டு இருக்க முடியாது.. வேண்டாம் எனக்கு உயிர் குடுக்காதே..” என்று அலறியது.

அந்த அலறல் அந்த பாப்பாவுக்கு எங்கே கேட்கப் போகிறது. அந்தச் செடி நடப்பட்டு விட்டது.

## வீடு நுழைவுப் போராட்டம்

கர்நாடக மாநிலம் கோலார் மாவட்டத்தில், மாவட்ட சமூகநலத்துறையின் புள்ளிவிவரங்கள் படி, மொத்த மக்கள் தொகை 15.4 இலட்சம். இதில் 4,65,867 பேர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் 78.875 பேர் பழங்குடியினர். மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதி தலித்துகள். ‘அறிவுகேந்த்ரா’ என்ற அமைப்பின் தலைவரும், கோலார் அரசு மகளிர் கல்லூரியில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரிபவருமான சிவப்பா அவர்களால் ‘கிரஹப்பிரவேசம்’ என்ற நிகழ்வு திட்டமிடப்பட்டது. தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களை ஆதிக்கஜாதியினரின் வீடுகளுக்கு அழைத்துச்செல்லும் போராட்ட வடிவத்தையே “கிரஹப்பிரவேசம்” என்கிறார்கள். கோயில் நுழைவு போல இந்த வீடு நுழைவுப் போராட்டம் தொடர்ச்சியாக நடத்தப்படுகிறது. அண்மையில் கோலார் மாவட்டத்தின் பல கிராமங்களில் நடத்தப்பட்ட நிகழ்வில், பல தலித்துகள் உயர்ஜாதியினர் வீடுகளுக்குள் சென்றனர்.

அதன் அடுத்தகட்டமாக, கோவில்நுழைவுப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். கர்நாடக தலித் சங்கர்ஷ் சமிதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), கர்நாடகா ரக்ஷனாவேதிகா, சமதாசைனிக்தளம் மற்றும் ஒத்த கருத்தியலை உடைய அனைத்து அமைப்புகளும் பேராதர வத்துடன் கூட்டமைப்பாக இணைந்துள்ளனர். இதனால், ‘தலித்தர கிரஹப் பிரவேச ராஜ்ய சமிதி’ என்ற பெயரில், ‘தீண்டாமை இல்லா இந்தியாவை நோக்கிய அணிவகுப்பு’ என்ற முழக்கத்தோடு நாடு முழுவதும் பிரச்சாரம் செய்ய முடிவு செய்யப் பட்டுள்ளது.

கோலார் மாவட்டத்தில் அறநிலையத்துறையின் கீழ் 1336 கோவில்கள் இருக்கின்றன. “பிரச்சாரத்தின் தொடக்கத்தைக் குறிக்க, தலித்துகளை முக்கியப் பிரமுகர்களின் துணையோடு, சௌதேஷ்வரி மற்றும் சோமேஷ்வரசுவாமி கோயில்களுக்குள் நுழையச் செய்வோம்!” என்று சிவப்பா கூறினார். “தலித்துகள் நகர்ப்புறங்களில் கோவில்களுக்குள் செல்லமுடியும் என்றாலும் கிராமப்புறங்களில் அவர்களின் நிலை மிகவும் பரிதாபமாகவே உள்ளது” என்றும் கூறினார் சிவப்பா. இது போன்ற நுழைவுகளை 1336 கோவில்களிலும் நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.



# ஆர்.எஸ்.எஸ்.ஸின். அமைப்பு முறையும், அணுகு முறையும்

யாழ்மொழி



“ பெரியாரியலுக்கு நேர் எதிரான கருத்தியலைக் கொண்ட இந்து வெறியர்களின் அமைப்பான ஆர்.எஸ்.எஸ் ஐ பற்றி ஓர் நாள் பேசிக் கொண்டிருந்த போது, நான் அவ்வமைப்பைப் பற்றி நிறைய விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் எனக் கூறினேன். ”

தோழர்களே! என் பெற்றோர்கள் இருவரும் பெரியாரியவாதிகள் என்பதால், என் சிறு வயதிலிருந்தே வீட்டில் அவர்கள் இருவரும் பல நாட்டு நடப்புகளைப் பெரியாரியப் பார்வையில் கலந்துரையாடுவதைப் பார்த்த அனுபவங்கள் உண்டு. அதனால், நானும் பெரியாரைப் படிக்கத் தொடங்கிய பின், பெரியாரியலின் பல்வேறு கூறுகளான ஜாதி ஒழிப்பு, கடவுள் மறுப்பு, பெண் விடுதலை, பொதுவுடைமை, தனித்தமிழ்நாடு ஆகியவற்றை அறிந்த பின், நானும் அவர்கள் கலந்துரையாடலில் இணைந்து கொண்டேன். பெரியாரியலுக்கு நேர் எதிரான கருத்தியலைக் கொண்ட இந்து வெறியர்களின் அமைப்பான ஆர்.எஸ்.எஸ் ஐ பற்றி ஓர் நாள் பேசிக் கொண்டிருந்த போது, நான் அவ்வமைப்பைப் பற்றி நிறைய விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் எனக் கூறினேன்.

உடனே, என் அம்மா, விடுதலை இராசேந்திரன் அவர்கள் எழுதிய “சங் பரிவார்களின் சதி வரலாறு” என்ற புத்தகத்தைப் படிக்குமாறு கொடுத்தார். அந்நூலிருந்து ஆரிய மதமான இந்து மதத்தை மக்களிடையே பரப்பி இந்தியாவில் உள்ளஅனைவரையும் இந்துக்கள் என்று உணர வைக்க, இந்துத்துவாவை இந்திய நாட்டில் நிலைநிறுத்த சங் பரிவார் என்னென்ன சதிகளை செய்கின்றன என்பது குறித்த நூல் அது. மத வெறியர்களைக் கொண்ட சங் பரிவார்கள் 10 முதல் 13 கிளை அமைப்புகளைக் கொண்டு இயங்குகின்றனர் என்பதை அறிந்து நம் எதிரிகள் இவ்வளவு வலிமையோடு தங்கள் இயக்கத்தை வைத்திருக்கிறார்களா? என நினைத்து பயந்தேன்.

எனக்கு மென்பொருள் உருவாக்குவதில் அதிக நாட்டம் இருப்பதால், "Rashtriya Swayamsevak Sangh app" என்று கூகுளில் தேடினேன். 100க்கு மேற்பட்ட அப்ளிக் கேஷன்களும், 10க்கும் மேற்பட்ட e-Reader apps (அதாவது மின்னூல்களைக் கொண்ட அப்ளிக்கேஷன்களும்) இருப்பதைக் கண்டு இணையத்தில் அவர்களின் செயல்பாடுகள் தீவிரமாக இருப்பதை அறிந்தேன். ஓர் அப்ளிக்கேஷனை மட்டும் தரவிறக்கம் செய்தேன். அதில் அவர்களின் 35 கிளை அமைப்புகளைப் பற்றிய விரிவான விளக்கங்களும், வாரா வாரம் மாற்றப்படும் காணொளிகளும், ஆடியோக்களும், ஆர்.எஸ்.எஸ்.-இன் நிறுவனரான ஹெட்கேவாரின் கருத்து களிலிருந்து தற்போது ஆர்.எஸ்.எஸ் தலைவரான மோகன் பகவத்தின் கருத்துகள் வரை நிறைய தகவல்கள் இடம் பெற்றிருந்தன. மேலும் உறுப்பினராக சேரவும் அதிலேயே வசதி இருந்தது. நாம் அதில் நம் எண், மின்னஞ்சல் முகவரி, மாநிலம், மாவட்டம், பகுதி போன்ற விவரங்களைக் கொடுத்து பதிவு செய்யலாம்.

எதிரிகளின் நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ள ஆவல் ஏற்பட்டதால், பதிவு செய்தால் அடுத்த கட்டமாக என்ன செய்கிறார்கள் என்று அறிவதற்காக நான் என் விவரங்களையும், அதில் ஆண்கள் மட்டுமே உறுப்பினர்கள் ஆக முடியும் என்பதால், ஓர் ஆண் பெயரைக் கொடுத்து, மதுரை எனப் பகுதியைத் தெரிவு செய்து பதிவு செய்தேன். உடனே ( Automatic Responder) மூலம் ஓர் மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. அதில் அப்பகுதி பொறுப்பாளரின் அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, பெயர் ஆகிய விவரங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

சரியாக ஒரு மணி நேரத்தில் என் அலைபேசிக்கு ஓர் அழைப்பு வந்தது. உங்களை நேரில் சந்தித்து பேச வேண்டும் என்று சொன்னார். எப்படி உறுப்பினர் ஆகலாம் என்று கேட்டேன்? அதற்கு அவர், அடுத்த வகுப்பு எப்போது இருக்குமோ அப்போது உங்களை அழைக்கிறேன் என்றும் அவ்வகுப்பில் சிறந்த முறையில் பங்கேற்றீர்கள் என்றால் ஆர்.எஸ்.எஸ்.-இல் அதிகாரப்பூர்வமான உறுப்பினர் (Official member) ஆகலாம் என்றும் குறிப்பிட்டார்.

அதில் சிறந்த முறையில் அவர்களின் எதிர்பார்ப்பிற்கேற்ப செயல்படவில்லை எனில் வெறும் உறுப்பினர், அதாவது அவர்களின் செயல்பாடுகளில் இணைந்து நிற்கலாம். இப்படி "அவ்வகுப்பில் சிறந்த முறையில் பங்கேற்றால் தான் அதிகாரப்பூர்வமான உறுப்பினராகலாம்" என்பன போன்ற கடுமையான கட்டுப்பாடுகளை (Strict Regulations) அமைப்பிற்கென கொண்டிருப்பதன் மூலம் தான் அவர்கள் முழுமையான, கொடூரமான இந்து வெறியர்களைத் துறைதோறும் தயார் செய்கிறார்கள் என்றே எனக்குத் தோன்றியது.

துறைதோறும் என்று குறிப்பிட்டேன் அல்லவா? 35 கிளைஅமைப்புகளைக் கொண்டு அப்படி எந்தெந்த தளங்களில் தான் செயல்படுகிறார்கள் என்பதைப் பற்றி பார்ப்போம். பாரதிய ஜனதா பார்ட்டி (அரசியல் அமைப்பு), பாரதிய கிசான் சங், (விவசாயிகளுக்கான அமைப்பு) பாரதிய மஸ்தூர் சங் (தொழிலாளர் சங்கம்) ஃபிஷ்ஷர்மென்'ஸ் கோ-ஆப் சொசைட்டி, விவேகானந்தா மெடிக்கல் மிஷன், அகில் பாரதிய ஷைக்ஷிக் மகாசங், (ஆசிரியர்கள் அமைப்பு) சேவா பார்தி [N.G.O], பாரதிய விகாஸ் பரிஷத், தீன்தயாள் ஷோத் சன்ஸ்தான் (ஆராய்ச்சி நிறுவனம் ) ராஷ்ட்ரிய சேவிகா சமிதி (இந்து பெண்கள் அமைப்பு) அகில் பாரதிய வித்யார்த்தி பரிஷத் (மாணவர்களுக்கான அமைப்பு) பாரதிய ஜனதா யுவ மோர்ச்சா (இளைஞரணி ) ஷிக்ஷா பாரதி (பள்ளிகள்) விஷ்வ ஹிந்து பரிஷத், ஹிந்து ஸ்வயம்சேவக் சங் (USA), ஹிந்து ஸ்டூடண்ட்ஸ் கவுன்ஸில், ஸ்வதேஷி ஜகரன் மன்ச் (பொருளாதார அமைப்பு) சரஸ்வதி ஷிசு மந்திர் (மழலையர் பள்ளிகள்) வித்ய பாரதி (உயர்நிலைப் பள்ளிகள்) லோக் பாரதி (NGO) தர்ம் ஜகரன் (துறவிகளுக்கான அமைப்பு) வனவாசி கல்யாண் ஆஷ்ரம் ( வனவாசிகளுக்கான அமைப்பு)

**" இந்தியாவில் வாழும் அனைவரும் இந்துக்கள்; நாத்திகனாயினும் அவன் இந்துவே என்றும் இந்தியா முழுவதும் ஒரே கலாச்சாரம். அது இந்துக் கலாச்சாரம் மட்டுமே. புத்தமும், சமணமும் இந்து மதத்தின் உள்ளடக்கமே!**

**புத்துலக தொலைநோக்காளர் என யுனெஸ்கோ புகழ்ந்து விருது வழங்கிய பெரியார், 1950-களில் ஒரு வாழ்க்கை இணையேற்பு விழாவை நடத்தி வைக்கும் போது, இது 1950 மாடல் திருமணம் தான். காலத்திற்கேற்ப திருமண முறைகள் மாறும். திருமணம் என்ற முறையே இல்லாமல் கூட போகும் என்று கூட பேசியிருக்கிறார்.**

முஸ்லிம் ராஷ்ட்ரிய மன்ச் ( முஸ்லிம் அமைப்பு ) பஜ்ரங் தள், பாரத் டிபெட் மைத்திரி சங் (இந்தியா திபெட் நட்புறவுக் கழகம்) அனுசுசித் ஜதி ஜமாதி அரக்ஷன் பசாவ் பரிஷத் ( தலித் முன்னேற்ற அமைப்பு ) சன்ஸ்கர் பாரதி (ஓவியர் களுக்கான அமைப்பு )சாகர் பாரதி (கூட்டுறவு சங்கம்) அதிவக்த பரிஷத் (வழக்குரைஞர்கள் அமைப்பு ) வித் சலாகர் பரிஷத் (நிதி ஆலோசகர் களுக்கான அமைப்பு ) பாரதிய விச்சார கேந்த்ரா (ஆராய்ச்சி நிறுவனம் ) அகில் பாரதிய இதிகாஸ் சங்காலன் யோஜனா (வரலாற்றுச் சீர்திருத்தத்திற்கான அமைப்பு) விஷ்வ சம்வத் கேந்த்ரா (இணையம், ஊடகங்கள் ஆகியவற்றில் இந்துத்துவக் கொள்கைகளைப் பரப்புவதற்கான அமைப்பு) ராஷ்ட்ரிய சீக் சங் (சீக்கியர்களுக்கான அமைப்பு) சென்ட்ரல் ஹிந்து மிலிட்டரி எஜுகேஷன் சொசைட்டி (ஹிந்துக்களை இராணுவத்துறைக்குத் தயார்படுத்துவதற்கான அமைப்பு ) இந்து முன்னணி (தமிழ்நாட்டில் உள்ள அமைப்பு) என்பனவாகும்.

சமீப காலத்தில் ஆர்.எஸ்.எஸ். ஐ.டி. மிலன் ( RSS IT Milan) என்ற பெயரில் தகவல் தொழில்நுட்பத்தில் உள்ளவர்களுக்கென்று ஓர் சந்திப்பு வாரந்தோறும் சென்னை, பெங்களூர், ஹைதராபாத், புனே ஆகிய நகரங்களில் ஏற்பாடு செய்யப்படுகின்றது. அந்த வகுப்பில் ஐ.டி. பணியாளர்கள் பங்கேற்பதால், அவர்கள் அதிக நேரம் கணிணியில் வேலை பார்க்கிறார்கள் என்பதால், அவர்களுக்கேற்ப கழுத்து மற்றும் முதுகு வலிகளுக்கான யோகா பயிற்சி, இந்து மதக் கோட்பாடுகள் ( Principles of Hinduism), இந்துவாக இருப்பது பெருமை (Proud to be a Hindu) என்பன போன்ற வகுப்புகள் எடுக்கப்படுகின்றன. மேலும் விஜயதசமி உத்ஸவ், ஹோலி, தீபாவளி, குரு பூஜா உத்ஸவ் போன்ற கொண்டாட்டங்களும் நடைபெறுகின்றன. அப்பண்டிகைகளின் அவசியம் குறித்தும் கற்பிக்கப் படுகிறது.

பின் RSS IT Milan இல் உறுப்பினர்களாக உள்ளவர்களைக் கொண்டு கல்லூரி மாணவர்களுக்கு Programming, Debugging, Web Designing போன்ற போட்டிகள் நடத்தப்படுகின்றன. வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களான Cloud Computing, Mobile Application development, Virtualization Techniques போன்ற தலைப்புகளில் கலந்துரையாடல் நிகழ்வுகளும் மாணவர்களுக்கென ஏற்பாடு செய்யப் படுகின்றன. தொழில்நுட்பத்தை சொல்லித் தருவதற்காக மட்டுமல்ல; இந்து மதத்தைப் பரப்புவதற்கும் தான்!!! இவ்வாறு மிக வலிமையாக தன் அமைப்பை வைத்திருப்பதால் தான் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், “இந்தியாவில் வாழும் அனைவரும் இந்துக்கள்; நாத்திகனாயினும் அவன் இந்துவே என்றும் இந்தியா முழுவதும் ஒரே கலாச்சாரம். அது இந்துக் கலாச்சாரம் மட்டுமே. புத்தமும், சமணமும் இந்து மதத்தின் உள்ளடக்கமே! என்றும், தன்னையே நம்பாதவனே நாத்திகன் என்றும் மோடியின் செல்வாக்கால் ஆட்சியைப் பிடிக்கவில்லை. ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தை மக்கள் ஏற்றதாலே ஆட்சியைப் பிடித்தோம்”, என்றும் மிகவும் துணிச்சலாகவும் வெளிப்படையாகவும் கூறுகிறான்.

இவ்வாறு பெண்ணடிமை, ஜாதி, பல கடவுள்கள் என நம் கருத்தியலுக்கு முற்றிலும் எதிர்மறையான கருத்துகளைக் கொண்ட ஆரிய மதமான இந்து மதத்தை, அதுவும் சமூகத்தில் பெரும்பான்மை மக்கள் பின்பற்றக் கூடிய ஓர் மதத்தைப் பரப்புவதற்கு இவ்வளவு தீவிரமான இவ்வெறியர்களின் செயல்பாடுகளைப் பார்க்கும் போது, மதத்திற்கு எதிராய், பெரும்பான்மை மக்களின் மூளையில் விலங்காய் உள்ள ஜாதிப் பெருமைகளுக்கும், ஆணாதிக்கத்திற்கும் எதிராக செயல்படும் நாம் மக்களிடமிருந்து, குறிப்பாக இளைய தலைமுறையிடமிருந்து அந்நியப்பட்டுக் கொண்டிருக்கிறோமோ? என்ற கேள்வி எழுகிறது.

# மோடியின் செல்வாக்கால் ஆட்சியைப் பிடிக்கவில்லை. ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தை மக்கள் ஏற்றதாலே ஆட்சியைப் பிடித்தோம்!

புத்துலக தொலைநோக்காளர் என யுனெஸ்கோ புகழ்ந்து விருது வழங்கிய பெரியார், 1950-களில் ஒரு வாழ்க்கை இணையேற்பு விழாவை நடத்தி வைக்கும் போது, இது 1950 மாடல் திருமணம் தான். காலத்திற்கேற்ப திருமண முறைகள் மாறும். திருமணம் என்ற முறையே இல்லாமல் கூட போகும் என்று கூட பேசியிருக்கிறார். இவ்வாறு அனைத்திலும் தொலைநோக்குப் பார்வை கொண்டிருந்த பெரியாரின் தொண்டர்கள் நாம் இன்னும் சொற்பொழிவுகள், பொதுக் கூட்டங்கள், கிராமப் பிரச்சாரம், புத்தகங்கள் என பழைய பிரச்சார முறைகளை மட்டுமே பின்பற்றுகிறோமோ? என்ற எண்ணம் எழுகிறது. அவையும் தேவையாக இருக்கலாம்; ஆனால் காலத்திற்கேற்ற மாறுதல்களும் தேவை என்பதை யோசிக்க முன் வர வேண்டும்.

சரி, இவை ஒருபுறம் இருக்கட்டும். சமூக மாற்றத்தை விரும்பும் பெரியாரியவாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் நாம் அம்மாற்றத்திற்கு முன்மாதிரியாக வாழ வேண்டும் அல்லவா?. ஆனால் நாம்? உதாரணமாக, பெரியாரியலின் மிக முக்கியமான கூறுகளில் ஜாதி ஒழிப்பும் ஒன்று. ஜாதியை ஒழிப்பதற்கு ஜாதி மறுப்பு திருமணங்கள் ஓர் முக்கியமான வழி என்று அம்பேத்கரும், பெரியாரும் வலியுறுத்தியுள்ளனர். ஆனால், ஏதாவது அற்பமான காரணங்களை சொல்லிக் கொண்டு, ஒரே ஜாதியில் மணமுடிக்கிறோம்.


இதே போல் தான் பெரியாரியவாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் நாம் தான் பெரியார் பெண்ணுரிமைப் போராளி என்று ஊருக்குக் கூறிக் கொண்டு தத்தம் வீடுகளில் பெண்களுக்கான உரிமைகளை மறுத்து, அவர்களை சிறந்த அடிமைகளாக வைத்துள்ளோம். ஆரியப் பண்பாட்டை நிலை நிறுத்துவதற்காக "மதக்குறிகள் நமக்கு இன்றியமையாதவை; அவை தான் இந்துக்களின் அடையாளம்" என ஆர்.எஸ்.எஸ். வலியுறுத்துகிறது. பெரியார், "மதக்குறிகளை இடாதீர்!" என்றார். ஆனால் நாம்? இவ்வாறு பலவற்றைக் கூறிக் கொண்டே போகலாம். ஆரியப் பண்பாடு ஜாதிப் பெருமைகளாக, மத அடையாளங்களாக, ஆணாதிக்க சிந்தனையாக நம் மூளையிலும் விலங்காய் இருக்கின்றது. அதை உணர்ந்து, உடைத்தெறிந்து, ஆரியப் பண்பாட்டிற்கு எதிராக ஓர் பெரியாரியப் பண்பாட்டு புரட்சியை ஏற்படுத்துவோம்.

பெரியாரை பெரியாரியவாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் நாம் முதலில் நன்றாக, தெளிவாகப் படிப்போம்; பெரியாரின் கருத்துகளை உள்வாங்குவோம்; பெரியாரியம் ஓர் வாழ்வியல் என்பதை உணர்வோம்; பெரியாரியலை வாழ்வியலாக்குவோம். சங்பரிவார்கள் நமக்கெதிரானவர்கள் தான்; ஆனால் ஓர் அமைப்பு எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு அவர்களை முன்மாதிரியாகக் கொள்ளலாம் என்றே தோன்றுகிறது. இந்துத்துவா சக்திகளின் கை ஓங்கியுள்ள இக்காலக்கட்டத்திலாவது, முனைப்போடு, தீவிரமாக, பல புதிய செயல்திட்டங்களோடு இலக்கை நோக்கி செயல்படுவோம்! அப்போது தான் பெரியார் கனவு கண்ட ஜாதியற்ற, பாலின பேதமற்ற சமத்துவ சமூகத்தை உருவாக்க முடியும்!!!!!



# பகவத்கீதை தேசிய நூலா ?

## முகநூல் முத்துக்கள்





**கமல் கண்ணா:**

**பகவத்கீதையை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் ... –சுஷ்மா சுவராஜ்...**

*அப்படியே, தேசிய ஆடையாக 'அரை டவுசரையும்' தேசியக் கோமாளிகளாக ஆர்.எஸ்.எஸ்.காரர்களையும் அறவிச்சாங்கன்னா, மாதம் மும்மாரி பெஞ்சி நாடு வெளங்கிரும்...*

---

**தோழர் அரங்க குணசேகரன்:**



*"பகவத் கீதையை தீயிட்டு எரிக்க, தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் மனுதர்ம நூலை எரித்தது போல் எரிக்க வேண்டும் என்பது என் நீண்டகால ஆசை;விருப்பம் கொள்கை. அதற்குரிய சரியான காலம் இதுவே எனக்கருதுகிறேன். .ஆதரவளிப்பவர்கள் அதாவது எங்களோடு போராட்டத்தில் பங்கேற்பவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்."*

தொடர்புக்கு: 90475 21117 *arangagunasekaran@gmail.com*

---



**மகிழ்நன் பா.ம:**

*கீதைய தேசிய பொஸ்தகமா அறிவிச்சதோட நிறுத்துடாதீங்கடா... அப்படியே அவாளுக்கு பிடித்தமான இந்த கோமியத்த (மாட்டு மூத்திரம்) தேசிய 'கூல் டிரிங்ஸா'கவும், 'வரட்டி'ய (மாட்டுச் சாணி) தேசிய 'நொறுக்குத் தீனி'யாகவும் அறிவிச்சிடுங்கடா...*

---

Parimala Panju:

**இந்துக்களின் தன்மானம் காக்க, அயோத்தியில் ராமர் கோயில் கட்ட வேண்டும்.**

*பிரவீன்தொகடியா,விசுவஇந்து பரிசத் அகில உலக செயல் தலைவர்*

**பெட்ரோமாக்ஸ் லைட்டேதான் வேணுமா?**



---

**இந்துக்களின் எல்லோருடைய பிரச்சினையை தீர்க்க பகவத்கீதை படிக்கணும்.** - சுஸ்மா சுவராஜ்

*எல்லா பிரச்சினையும் ஒரே வாரத்தில் தீரனும்னா, பகவத்கீதையை ஒரே வாரத்தில் படிச்சுடுங்க. ரொம்ப சிம்பிள் தீர்வா இருக்கே.*

---




**மணி கண்டன் மா.பா:**

**பகவத்கீதையை இந்தியாவின் தேசிய புனித நூலாக அறிவிக்க வேண்டும்**-சுஷ்மாசுவராஜ்.பாஜக ..... *அப்புடியே "பெண்கள் தாழ்த்தப்பட்டவர்கள்னு" பகவத்கீதையில எழுதி இருக்கே, அதை இந்தியாவின் சிறப்புனு அறிவிச்சுப்புடுங்கோ.. மேடம் ..*

---

**அன்பே செல்வா:**



*நம் தேசத் தந்தையை கொலை செய்ய தூண்டிய நூல் நம் தேசிய நூலா?காந்தியைக் கொன்ற கோட்சே நீதிமன்றத்தில் சொன்னது "நான் பகவத்கீதையை படித்ததால்தான் எனக்கு இந்த எண்ணம் ஏற்ப்பட்டது" காந்தி வழக்கின் நீதிபதி GD.கோஸ்லா "கோட்சே பகவத்கீதையை படித்திருந்தார், நல்ல குறிக்கோளை அடைவதற்காக செய்யப்படுகின்ற வன் செயல்களை நியாயப்படுத்துவதற்கு பகவத் கீதையை மேற்கோளாகக் காட்டுவதில் ஆர்வம் கொண்டிருந்தார்" (The Murder of the Mahathma)*

---

**மகிழ்நன் பா.ம:**

கீதை புனித நூலா?: கீதையில் கிருஷ்ணன் அர்ஜூனனுக்கு கீதா உபதேசம் செய்தானாம்...அதுவும் சண்டைக்கு நடுவுல.....அந்த புத்தகத்த இந்துக்கள்னு சொல்ற பெரும்பாலானவங்க பார்த்திருக்க கூட மாட்டாங்க...அப்படியே பார்த்திருந்தாலும் ஒருமுறை கூட படிச்சிருக்கா மாட்டாய்ங்க... இவ்வளவு பெரிய உரையாடலை சண்டைக்கு நடுவுல செஞ்சிட்டிருக்க முடியுமா? அப்படி செஞ்சிட்டிருந்தா அவன் லூசுப்பயலா இருக்க மாட்டானா? ஆனா, அதுதான் கீதா உபதேசமாம்...

சரி சூழலை விட்டுட்டு உள்ளடக்கத்துக்குள்ள போலாம்னு பார்த்தா? அங்கேயும் பைத்தியக்காரத்தனம்...

அர்ஜூனன் தன் குடும்பத்தினரைக் கொன்னா....வர்ணாசிரமக் கட்டுப்பாடு சிதைஞ்சிடுமே...சாதிக்கலப்பு ஏற்பட்டுடுமேனு கவலைப்பட்டானாம்...அதைக் கிருஷ்ணன்கிட்ட சொன்னானாம்..

நீ ஏன் அதுக்கெல்லாம் பயப்படுறே, நான் அவங்களை ஏற்கனவே கொன்னுட்டேன்...நீ கொல்றதா நினைச்சு அகந்தையா திரியாதே...போ..போய் கொல்லுனு தைரியம் கொடுத்தானாம்...அப்படி தைரியம் கொடுக்கிறதுக்குத்தான் பெரிய உருவம் எடுத்து கண்கட்டி வித்தை காமிச்சானாம். உடனே, பாஞ்சாலியை அடகு வச்சு ஆடுன கும்பலின் தலைமைத் தளபதி அர்ஜூனனும் அவங்க சகோதரர்களை சீவு, சீவுன்னு சீவிட்டானாம்

புத்தரோட கருத்துகள் செல்வாக்கு செலுத்தி வந்த சமூகத்துல, புத்தரோட கருத்தை வீழ்த்த நுட்பமாக உருவாக்கப்பட்டதுதான் இந்த கீதை.

அப்புறம் கீதைக்கு சொம்படிக்கிற சூத்திர பசங்க உள்ளிட்ட பெருமைக்குரியர்களே...

சூத்திரர்கள் என்றால் தாசி மக்கள் என்று கீதை சொல்வதையும், கீதை அர்ஜூனனுக்கு சொல்லப்படுவதற்கு முன்பாக மனுவுக்கு சொல்லப்பட்டதாக கிருஷ்ணன் சொல்வதையும் நினைவில் கொள்ளல் வேண்டும்..

கீதைல கிருஷ்ணன் நான்கு வர்ணங்களையும் நானே படைத்தேங்குறாரு, அதை நானே நினைச்சாலும் மாத்த முடியாதுங்கிறாரு, தமிழ்நாட்டுல கஷ்டப்படுற பிராமணர்கள் கிரிக்கெட்ல, வங்கில, இன்னும் பல பன்னாட்டு நிறுவனங்கள்ல, கிரிக்கெட்ல கோலோச்சுவதற்காக கிருஷ்ணன் படைச்சாரோ?

வர்ணம் சாதி இல்லீங்க அது வேறங்க பலர் சொல்லலாம் குணத்தின் அடிப்படையில் அது மாறக்கூடியதுன்னு சொல்லலாம்.. எங்கய்யா மாறுச்சு .கட்சிக்கு கட்சி தாவும் எஸ்.வி.சேகரை பிராமணனா இருக்க தகுதியில்லன்னு யாராவது தகுதிநீக்கம் பண்ணாங்களா?

சாராயக் கம்பெனிகளின் உயர்மட்ட பொறுப்பிலிருந்து, புரோக்கர் வேலை பார்க்கும் சோ.இராமசாமியையோ, அகில உலக புரோக்கர் சு.சாமியையோ இதுவரைக்கும் தகுதி நீக்கம் பண்றேன்னு ஒத்த இந்து அமைப்பு இதுவரைக்கும் சொல்லிருக்கா?

சுரண்டித் திங்கிறதுக்கும், கொலை பண்றதுக்கும், ஏமாத்திப் பொழைக்கிறதுக்கும் ஐடியா கொடுக்கிற நூல்தான் புனித நூல்னா, அந்த நூலை அறுக்கிறதுதானே உழைக்கும் மக்களின் கடமையாக இருக்க முடியும்?

அல்லது கீதையின் உபதேசத்தின்படி, எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ அதுவே நன்றாகவே நடக்கிறதுன்னு இருந்தீங்கனா? நாம விளங்கவேமாட்டோம் ..நம் அடிமைத்தனத்திலிருந்து நாம் மீளவே முடியாது?

கீதை முட்டாள்களின் உளறல் - அண்ணல் அம்பேத்கர்



**தகடூர் சம்பத்:**

கீதை தேசிய நூலாக அறிவிக்கப்படும் எனும் அறிவிப்பை கண்டித்து ஏன் கீதை எரிப்பு போராட்டம் நடத்தக் கூடாது.

**அன்பு ஏகலைவன்:**



கீதை எத்தனை கீதையடி!?
அவதூத் கீதை, அஷ்டாவக்ர கீதை,
ஈஸ்வர கீதை, கபில கீதை,
கணேச கீதை, தேவி கீதை,
உத்தர கீதை, பாண்டவ கீதை,
பிரம கீதை, பிட்சு கீதை,
யம கீதை, ராம கீதை,
வியாச கீதை, சிவ கீதை,
சுத கீதை, சூர்ய கீதை
என்று இப்படி பலவித கீதை இருக்காம்!
இதில் எதடா தேசிய கீதையா
அறிவிக்கப்போறீங்க கொங்காங்கோ?!...
உஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்
இப்பவே கண்ணக்கட்டுதே?!

**திராவிடப் புலி:**




2013ல் மனுசாஸ்திரத்தை கொளுத்தினோமே.. மனுசாஸ்திரத்தை கொளுத்திய எங்களுக்கு கீதையை கொளுத்த முடியாதா???

**Mugilan Swamiyathal:**



இராமன் தேசிய நாயகன்,
கீதை தேசிய நூல்,
சமஸ்கிருதம் தேசிய மொழி,
தீண்டாமை தேசியக் கடமை,
ஜாதி தேசியக் கட்டுப்பாடு,
வர்ணம் தேசியச் சட்டம்,
தாசி தேசியப் பெருமை,
பூணுால் தேசிய நூல்,
குதிரை தேசிய விலங்கு,
உடன்கட்டை தேசியக் கண்ணியம்,
அஸ்வமேத யாகம் தேசியத் தொழில்
............ வெளங்கிடும்டே!!???

**Dhalapathi Raj:**

கீதை கடவுளால்படைக்கப்பட்டதென்றால் உலகத்துக்கே புனித நூலாயிருக்கனுமே? இந்தியாவுல மட்டும் ஏன்டா புடிச்சுகிட்டு தொங்குறீங்க?

**Selva Kumar:**

கீதையை இன்றைய காலகட்டத்தில் உங்களால் கொளுத்த முடியுமா?? என சவால் விடுகிறான் இந்து முண்ணணி ரவிக்குமார்

கீதையை மட்டுமல்ல, அவசியம் ஏற்பட்டால் அய்யாவின் ஆணைப்படி அக்ரஹாரங்களும் கூட..,

# இட ஒதுக்கீடு
## ஒரு வரலாற்று உண்மை!

'இன்றும் நம் சமூகத்தில், உயர் ஊதிய வேலைகள் மற்றும் இன்னபிற இலாபகரமான தொழில்களில் சில பிரிவுகளின் ஆதிக்கமே காணப்படுகிறது. அதனால் ஏற்படும் பிரச்சனைகளை எதிர்கொள்ள இடஒதுக்கீடு ஒரு சிறந்தஆயுதம்' என்று கோவாவிலுள்ள சர்வதேச மையத்தில் நடைபெற்ற கலை மற்றும் இலக்கிய விழாவில் "அம்பேத்கர் மற்றும் இடஒதுக்கீடு" என்ற தலைப்பில் உரையாற்றிய வர்ஷா அய்யர் கூறினார். அவர் மும்பையிலுள்ள டாடா இன்ஸ்டிடியூட்டில் உதவிப்பேராசிரியராகப் பணிபுரிகிறார். அவர்கூறியதாவது:-

இடஒதுக்கீடு வறுமை எதிர்ப்புத் திட்டமோ, வளங்களை மறுபங்கீடு செய்யும் திட்டமோ அல்ல! இடஒதுக்கீடு என்பது சமூக அமைப்பில் அடிப்படையான சில மாற்றங்களைக் கொண்டு வரவும், சமூகத்தில் நிலவும் வேறுபாடுகளை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கிலும் கொண்டு வரப்பட்ட ஒரு கொள்கை வடிவமைப்பு! அது தகுதி, திறமைக்கு எதிரானது என்று நிலைப்படுத்த எடுக்கப்படும் முயற்சிகள் வருத்தமளிக்கின்றன.

சில பிரிவுகளுக்கு அதிகப்பிரதிநிதித்துவம் அளிப்பதும், சிறுபான்மையினர் மற்றும் ஒடுக்கப் பட்டவர்களுக்கு மிகக் குறைவான பிரதிநிதித்துவம் அளிக்கப்பதும் இங்கு இயல்பாக இருக்கிறது. இப்பிரச்சனையை அணுகி சரிசெய்ய நாம் முன்வர வேண்டும்.

'ஆங்கிலேயர்கள்தான் ஜாதி அமைப்பை உறுதிப்படுத்தினார்களா?' என்ற கேள்விக்கு மறுப்புத் தெரிவித்ததோடு, அவர்கள் அதனை உறுதிப்படுத்தவில்லை; அதனை ஆவணப்படுத்தத்தான் செய்தார்கள். அதற்காக, அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலித் ஆர்வலர்களின் எழுத்துகள் உயிர்ப்போடு உள்ளன; ஆனால் முக்கியமான பாரம்பரிய ஊடகங்கள் அதனை மக்களிடம் கொண்டுசெல்வதில்லை. அதை மட்டுமல்ல, தலித் பிரச்சனை களையும்தான். எனவே தலித் எழுத்தாளர்கள் சமூக ஊடகங்களை நாடுகின்றனர்.

–தலித் மீடியா வாட்ச், தமிழில். யாழ்மொழி

## புனிதனாக நிற்கிறாய் !

உன் கையில் இருக்கும் கத்தி
அழகானது!

அதை நீ கையாளும் லாவகம்
அதை விட அழகானது!

மெலிதாய்.. மிக மெலிதாய்
என் முகமெங்கும் கோடுகள் இடுகிறாய்!

துளிர்க்கும் ரத்தத்தை சுவைத்து
முத்தம் என்கிறாய்!

மயங்குகிறேன் நான்!

மயக்கத்தின் நடுவே
கண்ணாடியில் முகம் பார்த்து அலறுகிறேன்!

என் பிம்பம் தெரிந்த கண்ணாடியை உடைக்கிறாய்!

என் முகத்தில் தெரியும் கோடுகள்
கண்ணாடியின் கீறல்கள் என்கிறாய்!

நம்பி புன்னகைக்கிறேன்!

முகத்தில் முடிந்தது வேலையென
ஒரு மருத்துவரின் நுட்பத்துடன்
கத்தியை இதயத்தில் நுழைக்கிறாய்!

அந்த வலியை சுகிக்கவும்
கற்றுக் கொடுக்கிறாய்!

மெது மெதுவாய் ஆழ இறங்குகிறது...
இதயத்தின் மறு எல்லையை தொட்டவுடன்
அப்படியே சுழற்றி உருவுகிறாய்!

பீறிட்டுத் தெறிக்கும் என் ரத்தத்திற்கு நடுவே
புன்னகையுடன் மரிக்கிறேன் நான்!

ஒரு துளி ரத்தமும் மேலே படாமல்
புனிதனாக நிற்கிறாய் நீ!



# கல்யாண சமையல் சாதம்

Dr.பெரியார் செல்வி



இந்து திருமணங்களில் நடைபெறும் சடங்குகள் அறிவுக்கு எவ்வளவு விரோதமோ , அதே அளவுக்கு திருமண உணவு முறை ஆரோக்கியத்துக்கு விரோதம்.

இன்று திரைப்படங்களில் வரும் கணினித் தொழில் நுட்பங்களுக்குஎல்லாம் முன்னோடியாக கருப்பு வெள்ளை காலத்தில் வரும் ஒரு பாடல் இன்னும் வண்ணமயமாய் நம் கண்முன் நிற்கும். ஆம், மாயாபஜார் படத்தில் வரும் கல்யாண சமையல் சாதம் காய்கறிகளும் பிரமாதம், இது கௌரவப் பிரசாதம் என்னும் பாடல் .

இந்தியச் சூழலில் நடைபெறும் திருமணங்கள் பெரும் ஆடம்பரமாகத் திருவிழாக்கள் போன்று நடக்கும் சூழலில் அதன் பிரதிபலிப்பு உணவுகளிலும் பிரதிபலிக்கிறது. திருமணத்தின் மற்ற அம்சங்களால் ஏற்படும் பாதிப்புகள் புறம் சார்ந்ததாக இருக்கிறது. ஆனால் திருமண விருந்தால் அகம் சார்ந்து ஏற்படும் பாதிப்பு பல வருடங்களுக்கு நோயாகத் தங்கிவிடுகிறது .

எவ்வளவு ஆடம்பரமாக திருமண முறைகள் மாறியிருந்தாலும் “கல்யானமுன்னு செஞ்சா சோறு ருசியா இருக்கனும் வயிராற சாப்பிட்டு மனசார வாழ்த்தனும்” என்ற அடிப்படை அப்படியேதான் உள்ளது.வருடத்தில் 365 நாட்களில் 60 - 65 நாட்களில் மட்டும் திருமணங்கள் நடக்கிறது. முகூர்த்த மாதங்களில் ஒரு நாளில் ஒருவர் 4 - 5 திருமணங்களில் கலந்து கொள்கிறார் .

வழக்கில் இருக்கும் சில திருமண உணவு வகைகள் அவற்றின் சுவைக்கு சேர்க்கப்படும் பொருட்கள் அதனால் உடலுக்கு ஏற்படும் வியாதிகள் சில.

| | | |
|---|---|---|
| சமையல் சோடா | இட்லி,தோசை மாவு | வயிற்று உபாதை |
| சோயா | | செரிமானக் கோளாறு |
| அஜினமோட்டோ (சீனா உப்பு) | சம்பார், ரசம், குழம்புவகை | வயிற்றுப்புண், அஜீரணகோளாறு |
| டால்டா | பிரியாணி,இனிப்பு, பொங்கல் | கெட்ட கொழுப்பை அதிகமாக்குகிறது |
| புட் கலர் | பிரியாணி, கேசரி, அல்வா, குழம்பு | வயிற்றுப் புற்றுநோய், கல்லீரல் பாதிப்பு |
| சோடா உப்பு | அப்பளம் | வயிற்று உபாதை , செரிமானக் கோளாறு |

இப்போது சில உணவுகளின் கலோரி அளவினைப் பார்க்கலாம்.

| வ.எண் | பொருள் | அளவு | கலோரி |
|---|---|---|---|
| 1 | சாதம் | 150 | 306 |
| 2 | சாம்பார் | 150 | 199 |
| 3 | ரசம் | 150 | 36 |
| 4 | சப்பாத்தி | 1 | 80 |
| 5 | காய்கூட்டு | 100 | 415 |
| 6 | பொறியல் | 40 | 110-150 |
| 7 | பச்சடி | 80 | 112 |
| 8 | பிரியாணி | ½ plate | 460 |
| 9 | அப்பளம் | 1 | 160 |
| 10 | ஸ்வீட் | 1 | 140-170 |
| 11 | பனிகுழைவு | 1கப் | 146 |
| 12 | பாயாசம் | 1கப் | 90-120 |

இதில் ஒரு வேளை உணவு 800 கலோரிக்கு மிகாமல் பார்த்து கொள்ள வேண்டும்..எந்த வகையான இனிப்பாக இருந்தாலும் அதில் கண்டிப்பாக டால்டா சேர்க்கப்படுகிறது. இது இரத்தத்தில் உள்ள கெட்டகொழுப்பை அதிகப்படுத்துகிறது.

இதைவிட மிகவும் மோசமானது திருமணத்தில் உணவுக்குப் பின் தரப்படும் பழக்கலவை (Fruit salad) எதோ பழங்கள் உண்பது உடலுக்கு ஆரோக்கியம் என்பதை இவர்கள் தான் கண்டுபிடித்த மாதிரி..

இதன் விளைவு அதாவது சமைத்த உணவுடன் சமைக்காத உணவை சேர்த்து உண்பதால் செரிமான பிரச்சனையை ஏற்படுத்தும். ஒன்றுசமைக்காத உணவை 1/2மணி நேரத்திற்கு முன்னதாகவோ அல்லது 1மணி நேரத்திற்கு பின்போ எடுக்கவேண்டும். இல்லையென்றால் இரப்பையில் சுரக்கும் (HCL) ஹைட்ரோகுளோரிக் அமிலத்தை நீர்க்கசெய்து செரிமானப் பிராச்சனையை ஏற்படுத்தும்,

காலை உணவு முடிந்து டீ அல்லது காபி குடிப்பது நாம் உண்ட உணவின் இரும்புச்சத்தை அழித்துவிடுகிறது. Icecreams (பனிகுழைவு) புரதம் மற்றும் கொழுப்பு கலோரியின் அளவை அதிகப் படுத்துகிறது

ஆடம்பர திருமணங்களில் வீணாக்கப்படும் உணவின் அளவு பொருளாதாரத்துக்கும் எதிரானது. உழவனின் எவ்வளவு உழைப்பு வீணாக மண்ணில் கொட்டப்படுகிறது.கர்நாடக அரசு ஆடம்பரத் திருமணங்களை குறைக்கும் நோக்கில் சட்டங்களை இயற்றியுள்ளது. சிக்கனத் திருமணங்களை உணவிலிருந்து தொடங்குவோம் உடல் ஆரோக்கியமே. சமூக ஆரோக்கியமாக மாறும் .


காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

அட்டை பலவண்ணத்தில்:
பின்பக்க அட்டை : 5000.00
முன் அட்டை உள்பக்கம் : 3000.00
பின் அட்டை உள்பக்கம் : 3000.00
அட்டை உள்பக்கம் 1/2 பக்கம் : 1500.00

ஏட்டின் உள்பக்கம் கருப்பு வெள்ளை:
1 பக்கம் : 1500.00
1/2 பக்கம் : 750.00

விளம்பர தொடர்புக்கு:
பல்லடம் சி.விஜயன் 99427 30983
ஜீவாநகர் குமார் 99944 77013

விளம்பரம் மற்றும் ஆண்டுச்சந்தா

ஆண்டுச்சந்தா : 200.00
தொடர்புக்கு:
வழக்கறிஞர் கிருட்டிணக்குமார்
97882 97428

அதி அசுரன்



# ஜல்லிக்கட்டு

## இந்து-ஆணாதிக்க-ஜாதி ஆதிக்கப் பண்பாட்டு விழா

ஜல்லிக்கட்டுக்கு உச்சநீதிமன்றம் தடைவிதித்த உடனே தமிழ்நாட்டில் பல இயக்கங்கள், அமைப்புகள், அரசியல்கட்சிகள் கடுமையான எதிர்ப்பைப் பதிவுசெய்தன. இப்போது ஜல்லிக்கட்டுப் பருவம் என்பதால் மீண்டும் அடுத்த சுற்று எதிர்ப்புகள் வரத்தொடங்கியுள்ளன. இந்த ஜல்லிக்கட்டு ஆதரவுக்குழுவில் எச். ராஜா, சுப்பிரமணியசாமி வகையறாக்கள் புதிதாகச் சேர்ந்திக்கிறார்கள். பார்ப்பனப் பண்பாட்டு ஆதிக்கத்துக்கு எந்தச் சிக்கலும் வைக்காத இந்த ஜல்லிக்கட்டை அவர்களும் ஆதரிப்பதில் வியப்பில்லை. நேற்றுவரை தமிழர் பண்பாட்டின் அடையாளமாக காட்டப்பட்ட ஜல்லிக்கட்டு அண்மையில் இந்துமத அடையாளமாகவும் சரியாக அடையாளம் காட்டப்பட்டுள்ளது. தோழர் சீமான் ஜல்லிக்கட்டுக்கான தடையை நீக்கக்கோரி விடுத்த அறிக்கையில்,

“ஜல்லிக்கட்டு தமிழர்களின் பாரம்பர்ய வீர விளையாட்டு. காலம் காலமாகத் தமிழர்களின் வீர அடையாளமாகவும் பண்பாட்டுச் சிறப்பாகவும் விளங்கும் ஜல்லிக்கட்டு விளையாட்டை ஒரு சில காரணங்களைச் சொல்லி நடத்த விடாமல் தடுப்பது தமிழர்களின் உணர்வுகளைச் சீண்டிப்பார்க்கும் செயல்.

எங்கள் பாட்டன் சிவபெருமான் வழிபாட்டிலேயே மாடுகளைத்தான் தெய்வமாகக் கொண்டாடுகிறோம். நந்தியை வணங்கிய பிறகே சிவனை வழிபடும் வழக்கம் கொண்டவர்கள் தமிழர்கள். ஒரு மாட்டின் கதறலுக்காக சொந்த மகனையே தேர்க்காலில் இட்டுக் கொன்ற மனுநீதிச் சோழனின் வம்சா வழியான தமிழர்கள் மாடுகளை தங்கள் குடும்பங்களின் ஓர் அங்கமாகக் கொண்டாடி வருகிறார்கள்.” என்று கூறியுள்ளார்.

ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் சிவபெருமான் எப்போது பாட்டன் ஆனாரோ தெரியவில்லை. தனது கோவிலிலேயே தன்னை வழிபட்டவே தமிழைப் பயன்படுத்த வைக்காத சிவன் எப்படி தமிழர்களுக்குப்

**21 ஆம் நூற்றாண்டில் வாழ்வதற்கு உடல் பலத்தை விட மூளை பலமே முக்கியம் என்ற இந்த யுகத்திலும் கற்கால விளையாட்டை விளையாடிக் கொண்டிருப்பது தேவையற்றது..**

பாட்டன் ஆவான்? அதுகிடக்கட்டும். நந்தி வழிபாடு என்பது பிரதோஷ விரதம் அனுசரிப்பதுதான். கடந்த சில ஆண்டுகளாக இந்த பிரதோஷம் விரதம் என்பது பெண்களிடையே பிரபலமாகிவருகிறது.

சிவனுக்கு உரிய விரதங்களில் முக்கியமானது இவ்விரதம். இவ்விரதத்தைக் கடைபிடிப்போர் அதிகாலையில் எழுந்து நீராடி, அன்று முழுதும் உண்ணாவிரதம் இருந்து, மாலை பிரதோஷ நேரத்தில் சிவாலயம் சென்று உள்ளம் உருகி ஓம் நமச்சிவாய என ஓதி வழிபட வேண்டும். நந்தியின் (மாட்டின்)இருகொம்புகளுக்கிடைேய நின்று சிவனைக் கண்டு வணங்க வேண்டும். நமது வேண்டுதல்களை நந்தியின் காதில் கூற, நமது வேண்டுதல் நிறைவேறும்.

இந்த நந்திவழிபாடு என்பது தமிழ்நாட்டில் மட்டும் நடப்பது இல்லை. தமிழர்கள் மட்டும் கடைபிடிப்பதில்லை. இந்து மதம் உள்ள அனைத்து நாடுகளிலும், இந்தியாவில் உள்ள பல தேசிய இனங்களைச் சார்ந்த இந்துக்களிடையேயும் உள்ள இந்து வழிபாட்டு முறை.

அதுபோல, தமிழர்களை சூத்திரர்களாக, விபச்சாரி மக்களாக, சட்டப்படியும், இன்றளவிலும் வைத்திருப்பது மனுசாஸ்திரம். அந்த மனுசாஸ்திரத்தைச் சரியாகச் செயல்படுத்தியவன் மனுநீதிச்சோழன். தமிழர்களின் முன்னேற்றத்துக்குத் தடையான மனுஅநீதிச் சோழனின் செயலை தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாகக் காட்டும் போக்கு ஆர்.எஸ்.எஸ் சின் அணுகு முறையாகும். திருக்குறளைப் பாராட்டும் தருண்விஜயின் செயலைப்போன்றது இது. இந்த இந்து வழிபாட்டு முறையையும், பார்ப்பன ஆதிக்கத்துக்கு அடிப்படையான மனுசாஸ்திர பண்பாட்டையும், தமிழர் பண்பாடாகச் சித்தரிக்கும் தோழர் சீமானின் அறிக்கை கடும் கண்டனத்துக்கு உரியதாகும்.

ஜல்லிக்கட்டு என்பது தொன்மையான விளையாட்டு சங்க இலக்கியங்களிலேயே இதற்கு சான்றுகள் உள்ளன - தமிழர்களின் பண்பாட்டு அடையாளம் என்றெல்லாம் வாதங்கள் அனல் பறக்கின்றன. எனவே அந்தச் சங்க இலக்கியங்களில் இந்த ஜல்லிக்கட்டைப் பற்றி அப்படி என்னதான் இருக்கின்றது என்று பார்க்கும்போதுதான் ஒரு ஜாதிக்குள் அல்லது ஒரு குலத்துக்குள் திருமணம் முடிக்கும் முறையோடு பிண்ணிப்பிணைந்ததே இந்த ஏறுதழுவல் என்பதைக் காணமுடிந்தது.

தொல்காப்பியத்திற்கும் முந்தையது என்ற ஒரு முற்றுப்பெறாத விவாதத்தில் உள்ள சங்க இலக்கியம் கலித்தொகை. அதில் முல்லைக்கலி என்ற பகுதியில் 103 வது பாடல் இதோ...

கொல்லேற்றுக் கோடஞ்சுவாணை மறுமையும்
புல்லாளே, ஆய மகள்,
அஞ்சார் கொலையேறு கொள்பவர் அல்லதை,
நெஞ்சிலார் தோய்தற்கு அரிய-உயிர் துறந்து-
நைவாரா ஆயமகள் தோள்,
வளியா அறியா உயிர், காவல் கொண்டு,
நளிவாய் மருப்பஞ்சும் நெஞ்சினார் தோய்தற்கு
எளியவோ, ஆயமகள் தோள்?
விலைவேண்டார் எம்மினத்து ஆயர் மகளிர்-
கொலையேற்றுக் கோட்டிடைத், தாம்வீழ்வர் மார்பின்
முல்லையிடைப் போலப், புகின்.
ஆங்கு:
குரவை தழீ, யாம், மரபுளி பாடி

தான் காதலிக்கும் பெண்ணின் மார்பகங்களைப் போலக்கருதி ஆர்வமுடன் காளையைத் தழுவி, அணைத்து, அடக்கும் ஆயர் இளைஞரே, தம் மகளுக்குத் துணையாக வர வேண்டும் என பெற்றோர் விரும்புவார்கள். கொம்புகளுக்கு அஞ்சி, உயிருக்குப் பயந்து காளையை அடக்கும் போட்டியில் இறங்காத ஆய இளைஞரை ஆய மகள் விரும்பமாட்டாள்.

என்கிறது இந்தப்பாடல். இப்பாடல் மட்டுமல்ல, முல்லைக்கலியில் உள்ள இன்னும் சில பாடல்கள் ஆடு மாடுகளை அடிப்படையாக வைத்து வாழ்ந்தவர்களை ஆயர்குலம் என்றும், அந்த ஆயர் குலத்தின் வீரம், கொடை,

**“ ஜல்லிக்கட்டு அண்மையில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு தான் தொடங்கப் பட்டுள்ளது. நீண்ட நெடிய பாரம்பரியமெல்லாம் ஜல்லிக்கட்டுக்குக் கிடையாது.**

திருமணமுறை, பொருளீட்டும் முறை, போன்ற பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை விளக்குகிறது. முல்லைக்கலியில் அல்லாமல் வேறு எந்த சங்க இலக்கியத்திலும் ஏறுதழுவல் பற்றிய விளக்கமான பாடல்கள் இல்லை. வேறுகுலத்தவர் அல்லது வேறு ஜாதியினர் எவரும் ஏறுதழுவலை அடிப்படையாக வைத்து மணஉறவுகளை மேற்கொள்ளவில்லை.

ஜாதிக்குள் தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற முறை வலுப்பெற்றதற்கு இந்த ஏறுதழுவல் என்ற விளையாட்டு மிகமுக்கியக் காரணமாக இருந்திருக்கிறது என்பதைச் சங்கஇலக்கியங்களே உறுதிசெய்கின்றன. தமிழர்களின் ஆரம்பகால வரலாற்றில் ஆயர்குலத்தைத் தவிர மற்ற தமிழர்களுக்கும் இந்த ஜல்லிக்கட்டுக்கும் தொடர்பு இருப்பதற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் இல்லை.

சங்க காலத்தில், தமிழ்ச்சமுதாயக் காதலர்கள் திருமணத்துக்கு முன்பே தனக்கு விருப்பமான ஆண், பெண் துணைகளுடன் உடன்போக்கு, களவுமணம், முன்வரைவு என்று இணைந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள். லிவிங்டுகெதர், கம்பேனியன்ஷிப் போன்ற அந்நிய நாட்டுப் பண்பாடுகளுக்கு முன்னோடியாக தமிழர்களின் உடன்போக்குப் பண்பாடு இருந்திருக்கிறது. அந்த உடன்போக்குப் பண்பாட்டை மீட்டெடுக்க சுப்பிரமணியசாமிகளும், தமிழ்நாட்டு அரசியல்வாதிகளும், பண்பாட்டுக் காவலர்களும் ஆயத்தமாக இருக்கிறார்களா?

துணங்கைக்கூத்து என்ற பெயரில் நடந்த Hug Of Love விழாக்களை தற்போது நடத்த ஆயத்தமாக இருக்கிறார்களா? சேரநாட்டுத் தமிழர்கள் அண்மையில் Kiss Of Love, Hug Of Love ஆகிய பெயர்களில் ஒரு புதிய போராட்ட வடிவத்தை முன்னெடுத்து, கேரளத்துக் காவிகளையும் இந்திய அளவிலுள்ள அனைத்து மதவெறியர்களையும் மிரளவைத்தனர். துணங்கைக்கூத்து நடத்திய தமிழர்களின் தற்காலத்தலைமுறைகளாகிய நாம் அமைதியாக அவற்றை வேடிக்கை பார்த்தோம். தாம் நடத்தா விட்டாலும் பரவாயில்லை. கேரளாவில் நடக்கும்போது இது தமிழர்களின் பண்பாடு தான் என்று சொல்லி ஒரு ஆதரவுக் குரல் கூட எழுப்பாமல் கள்ளமவுனம் சாதித்தது ஏன்?

காதலர் தினமோ, உடன் போக்கோ, முன்வரைவோ, துணங்கைக்கூத்தோ இவையெல்லாம் சங்க இலக்கியக் காலத்தில் நடைமுறையில் இருந்தாலும் அவற்றை இப் போது நடைமுறைப்படுத்தத் தொடங்கினால் அவை ஜாதிமறுப்புத் திருமணங்களையும், மத மறுப்புத் திருமணங்களையும் அதிக அளவில் உருவாக்கிவிடும். அது பார்ப்பன பண்பாட்டு மேலாண்மைக்கு எதிரானதாகும். எனவே அவற்றை மீட்கவோ, தொடங்கவோ எவரும், எந்தப் பண்பாட்டு மீட்பரும் முன்வருவ தில்லை.

> **“ ஜாதிக்குள்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற முறை வலுப்பெற்றதற்கு இந்த ஏறுதழுவல் என்ற விளையாட்டு மிகமுக்கியக் காரணமாக இருந்திருக்கிறது என்பதைச் சங்க இலக்கியங்களே உறுதிசெய்கின்றன.**

ஆனால் ஜல்லிக்கட்டு அப்படி அல்ல. ஜாதிவெறி, மதவெறி இரண்டையும் ஊதிப்பெருக்கும் தன்மையுடையது. எனவே ஜல்லிக்கட்டிற்காக அனைத்து அரசியல் வாதிகளும், சு.சாமி போன்ற புரோக்கர்களும், சில தமிழ்த்தேசியர்களும் அதற்கு ஆதரவாக நிற்கிறார்கள்.

ஏறுதழுவல் காலத்திலிருந்து இன்று வரை இந்த ஜல்லிக்கட்டு தொடர்ந்து நடப்பதாக நாம் நம்பிக்கொண்டிருக்கிறோம். அதுவே தவறு. திணைவழிப்பட்ட சமுதாயங்கள் முடிவுக்கு வந்து அரசுகள் தோன்றிய பிறகே இந்த ஏறுதழுவல் வழக்கொழிந்துபோய்விட்டது. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஏறுதழுவலின் நோக்கத்திலும், அதன் நடைமுறையிலும் மாறுபட்ட ஜல்லிக்கட்டு அண்மையில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்புதான் தொடங்கப் பட்டுள்ளது. நீண்ட நெடிய பாரம்பரியமெல்லாம் ஜல்லிக்கட்டுக்குக் கிடையாது. அதுவும் தமிழர் பண்பாட்டு அடிப்படையில் வந்த விழா அல்ல. இந்துப்பண்பாட்டு அடிப்படையில் உருவான உயர்ஜாதி இந்துக்களின் விழாவே இந்த ஜல்லிக்கட்டு.

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு அலங்காநல்லூர் பகுதியில் காலரா பரவி மக்களெல்லாம் கொத்துக்கொத்தாக இறந்து போனார்கள். ஊர்க்காரர்கள் தங்கள் காவல்

தெய்வமான முனியாண்டியிடம் வந்து கதறியிருக்கிறார்கள். பூசாரிக்கு அருள் வந்து இப்படி அருள்வாக்கு சொன்னாராம் முனியாண்டி "கிராமத்தில மாடு பிடிக்கிறதை நடத்துங்க. அதைப் பார்க்க வர்றவங்களை நான் பலிவாங்கிடுவேன். எங்கேயோ இருந்து வர்றவனும், கடல் கடந்து வர்றவனும் பலியாவான். உள்ளூர்க்காரங்க காப்பாத்தப்பட்டுடுவாங்க." என்றாராம். அதன் பிறகே ஊரில் ஜல்லிக்கட்டு நடக்க ஆரம்பித்திருக்கிறது.

மாட்டுக் கொம்பில் அந்தக் காலத்துச் சல்லிக்காசுகளை மொத்தமாகக் கட்டி மாடு பிடிக்கிறவர்களுக்கு அது கிடைப்பதால் 'சல்லிக்கட்டு' என்று ஆனது. தை மாதத்தில் விவசாயத்தின் மூலம் ஊர் சற்று செல்வாக்குடன் இருக்கும் நேரத்தில் பொங்கலுக்கு மறுநாள் ஜல்லிக்கட்டு நடக்க ஆரம்பித்திருக்கிறது. இப்போதும் அலங்காநல்லூரில் 5 நாட்கள் நடக்கும் திருவிழா முனியாண்டி சாமி வழிபாட்டுடன்தான் ஆரம்பிக்கிறது. அலங்காநல்லூருக்குப் பிறகுதான் தமிழகத்தின் மற்ற ஊர்களிலும் ஜல்லிக்கட்டு நடத்துள்ளது. (இதழியலாளர் மணா இந்த ஜல்லிக்கட்டு உருவான வரலாற்றை விரிவாகப் பதிவுசெய்துள்ளார்.)

இந்துப்பண்பாட்டு அடிப்படையில் எது உருவானாலும் அதில் ஜாதியும் முக்கியப் பங்கு வகிக்கும் என்பதில் யாருக்கும் அய்யமிருக்காது. இந்த ஜல்லிக்கட்டிலும் தாழ்த்தப்பட்டவர்கள் பங்கேற்க முடியாது. அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டில் பறையடிக்கும் உரிமை மட்டுமே தாழ்த்தப்பட்டோருக்கு உண்டு. தாழ்த்தப்பட்டவர்களும் தனியாக ஜல்லிக்கட்டு நடத்துகின்றனர். தனிக் கிணறு, தனி சேரி என்பது போல அவர்கள் தனியாக நடத்திக்கொள்ளலாம். ஆனால் ஒரு பிற்படுத்தப்பட்டவரின் மாட்டை தாழ்த்தப் பட்டவர்கள் அடக்க அனுமதிப்பதில்லை.

**ஒரு பிற்படுத்தப்பட்டவரின் மாட்டை தாழ்த்தப்பட்டவர்கள் அடக்க அனுமதிப்பதில்லை. ஒன்றிரண்டு தவறிப்போய் அப்படி நடந்துவிட்டாலும், அடக்கும் அந்த தலித் எவ்வித அடையாளமும் இன்றி கொல்லப்படுவான். அல்லது யாருக்கும் தெரியாமல் அந்த மாடு கொல்லப்படும்.**

ஒன்றிரண்டு தவறிப்போய் அப்படி நடந்து விட்டாலும், அடக்கும் அந்த தலித் எவ்வித அடையாளமும் இன்றிக் கொல்லப்படுவான். அல்லது யாருக்கும் தெரியாமல் அந்த மாடு கொல்லப்படும். அல்லது அடிமாடாகப் போகும்.

இந்துப்பண்பாடு என்றால், ஜாதிய ஏற்றத்தாழ்வுகள் மட்டுமல்ல. ஆண் ஆதிக்கமும் அவசியம் இருக்கும் என்பது நாம் அறிந்ததே. ஜல்லிக்கட்டு என்பது தமிழர் பண்பாடுதான் என்று யாராவது உறுதிப்படுத்தினால்கூட அவர்களுக்கு எமது கேள்வி என்னவென்றால், யாருக்கும் அடங்காத காளையை அடக்கும் உடல் வலுவுள்ள ஒருவனுக்கு தனது மகளைக் கொடுப்பது என்பதைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்த முடியுமா? ஏறுதழுவலில் ஒரு பெண், ஒரு பொருளாக - ஒரு நுகர் பொருளாக - ஒரு பரிசுப்பொருளாக மட்டுமே பங்குவகிக்க விதிக்கப்பட்டிருக்கிறாள். உடல் வலுவுள்ள ஓர் ஆணின் துணை இல்லாவிட்டால் ஒரு பெண்ணால் வாழமுடியாது என்ற பொருளைத்தான் ஏறுதழுவல் உறுதிப்படுத்துகிறது. பெண்கொடுத்தல், பெண் எடுத்தல் என்ற முறைகளே தவறு. ஆணோ, பெண்ணோ, அவரவர் இணைகளை அவரவர்களே தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்த வேண்டியதுதான் தற்காலத்திற்கு உரிய தமிழர் அடையாளமாக இருக்கவேண்டும்.

சங்க காலத்தில் வெறும் இலை தழைகளை மட்டுமே ஆடையாக சூடிக்கொண்டுதானே வாழ்த்தோம்? இலைகளையும் மலர்களையும் மட்டுமே ஆடைகளாக அணிந்து வாழ்ந்தோம் என்பதற்கு சங்க இலக்கியங்களில் நூற்றுக்கணக் கான சான்றுகள் உள்ளன. இப்போது இந்த ஜல்லிக்கட்டுக்காகக் குரல் கொடுப்பவர்களைக் கேட்கிறோம். தி.மு.க, அ.தி.மு.க, ம.தி.மு.க, பா.ஜ.க, கம்யூனிட் போன்ற அரசியல் கட்சியினராகட்டும், தோழர்கள் மணியரசன், சீமான் ஆகட்டும், யாராவது தற்போது இலை, தழைகளைக் கட்டிக்கொண்டு வாழத்தயாரா? தமிழர் பண்பாட்டு அடையாளம்தானே இவை?

உடையில் மட்டுமல்ல, உணவில், பழக்கவழக்கங்களில் எவ்வளவோ மாற்றங்களை ஏற்று, அனுமதித்து, காலத்திற்கேற்ற வகையில் மாறிக்காண்டேதான் வந்துள்ளோம். நாம் மட்டுமல்ல. உலகின் அனைத்து இன மக்களும் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்து தற்போது மாறிக்கொண்டு இருப்பவர்கள் தான். பண்பாட்டின் அடையாளம் என்ற பெயரில்

**மாட்டின் கொம்புகளைவிட பார்ப்பானின் உச்சிக்குடுமி மயிர்களுக்கு பலம் அதிகமாக இருக்கும் காலம் இது. மாடுபிடிக்கப் போராடுவதை விட்டுவிட்டு மேற்கண்ட கல்விநிறுவனங்களில் இடஒதுக்கீடு கிடைக்கப்போராடுங்கள். எதிர்காலத் தமிழன் ஏற்றமுடன் வாழ்வான்.**"

அப்பட்டமான ஓர் இந்து, ஆதிக்கஜாதி, ஆணாதிக்கப் பண்பாட்டை எதற்காகக் காப்பாற்றவேண்டும்? எந்தப் பண்பாடாக இருந்தாலும் அது வாழும் காலத்தில் அது நமக்குப் பயன்படுவதாக இருக்கவேண்டும். அவற்றை நாம் தூக்கிச்சுமக்க வேண்டியதாய் இருக்கக்கூடாது. அப்படித் தூக்கிச்சுமக்க வேண்டி வந்துவிட்டாலே அது சடங்கு, சம்பிரதாயம் என்ற வகைக்குள்தான் அடங்கும்.

உச்சநீதிமன்றம் இதுபோன்ற ஒருமுரட்டுத்தனமான அறிவுக்கு வேலையற்ற ஒரு விளையாட்டைத் தடைசெய்ததை, தமிழர்கள் முன்னேற்றத்தில் அக்கறையுள்ள அனைவரும் மனமாரப் பாராட்டி வரவேற்கவேண்டும். அதேசமயம், உணவுக்காக மாடுகளை வளர்க்கும் தொழிலை அங்கீகரித்திருந்த புத்தமதச் சார்ந்த அசோகர் ஆண்ட நாடு இது. மிருகங்களை வதைக்கக்கூடாது என்ற போர்வையில் ஆடு, மாடு, கோழிகளை உண்ணக்கூடாது என, உச்சிக்குடுமியாட்டம் நடக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டியது நம் கடமை.

21 ஆம் நூற்றாண்டில் - வாழ்வதற்கு உடல் பலத்தைவிட மூளை பலமே முக்கியம் என்ற இந்த யுகத்திலும் கற்கால விளையாட்டை விளையாடிக்கொண்டிருப்பது தேவையற்றது. காலத்திற்கேற்ப தன்மை மாறி தனது வடிவத்தை மாற்றிக்கொண்ட இந்த ஜல்லிக்கட்டு இந்தக் கணிணி யுகத்தில் அவசியமற்றது. தானாகவே அழியக்கூடியது. அதற்கு உச்சநீதிமன்றம் தடைவிதித்திருப்பது சரியானது. இந்தத்தடைச் செய்தி பரபரப்பான அதே நாளில் நமக்குப் பெரும் அதிர்ச்சியாக வந்திருக்கும் மற்றொரு செய்தி விவாதத்திற்கே வரவில்லை என்பதுதான் வேதனை.

அகில இந்திய அளவிலும், அகில உலக அளவிலும் அதிகார மையங்களை ஆட்டிப் படைக்கும் - அக்கிரகாரக் குடுமிகளுக் காகவே நேந்து விடப்பட்டிருக்கும் - நவீன பிரம்ம தேயங்கள்தான் ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம் நிறுவனங்கள். அந்தக் கல்வி நிறுவனங்களில் நுழைவதற்கு நடத்தப்பட்ட அகில இந்திய நுழைவுத்தேர்வில் தமிழ்நாட்டு மாணவர்கள் 2.5 சதம் என்ற அளவில் மட்டுமே தேர்ச்சி பெற்றுள்ளனர். 21,818 இடங்களைப் பிடித்து ஆந்திரா முதல் இடத்தில் உள்ளது. 19,409 இடங்களைப் பெற்று உத்திரப்பிரதேசம் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. 16,867 இடங்களைப் பெற்று இராஜஸ்தான் மூன்றாவது இடத்தில் உள்ளது. தமிழ்நாடு இன்னும் மாடுகளைக் கட்டிப்பிடித்துக்கொண்டு 14 வது இடத்தில் தேங்கி நிற்கிறது.

இவை போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் மட்டுமல்ல. இந்தியாவின் மிக முக்கிய அரசியல் தலைவர்கள் உருவாகும் புதுடில்லி ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகம், டில்லிப் பல்கலைக்கழகம், அலிகார், பிட்ஸ் பிலானி போன்ற எவற்றிலும் தமிழர்களுக்கு, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுமதி கிடையாது. அனைத்தும் இராஜராஜ சோழன் உருவாக்கிய வேத பாடசாலை களைப் போலவே பார்ப்பான் பண்ணையமாக இருக்கின்றன.

2000 ஆண்டுகளுக்கு முன்பு முல்லைநிலத்து தமிழர்கள் வாழ்வதற்கு மாடுகள் தேவை, மாடுகளை அடக்குவதும் தேவையாக இருந்திருக்கலாம். இன்று ஒட்டு மொத்தத் தமிழனும் உயர்வதற்கு ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம், எய்ம்ஸ், என்.ஐ.டி போன்ற நிறுவனங்களே தேவை. மாட்டின் கொம்புகளைவிட பார்ப்பானின் உச்சிக்குடுமி மயிர்களுக்கு பலம் அதிகமாக இருக்கும் காலம் இது.

மாடுபிடிக்கப் போராடுவதை விட்டுவிட்டு மேற்கண்ட கல்விநிறுவனங்களில் இடஒதுக்கீடு கிடைக்கப்போராடுங்கள். எதிர்காலத் தமிழன் ஏற்றமுடன் வாழ்வான்.




அ.ப.சிவா



இப்படியாக ஆயிரம் முரண்களுக்குள் வாழ்கிறோம். நமக்கான வாழ்க்கையில் நம் விருப்பங்களை நிறைவேற்றத் தடையாக இருக்கும் இரகசியம் என்ன?

# சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு

தொழில் அடிப்படையில் கட்டிடப் பொறியாளனான நான் சந்தித்த ஓர் அனுபவத்தை உங்களோடு பகிர்கிறேன். நடுத்தர வர்க்க மக்களின் வாழ்நாள் கனவை நனவாக்கும் வேலை எங்களுடையது என்பதால் எப்போதும் சவால் நிறைந்தே காணப்படும். கட்டிடத்தின் வடிவமைப்பில் தொழில்நுட்பத்தை பின்னுக்கு தள்ளியுள்ளது வாஸ்து.

தொழில்நுட்ப அறிவுள்ள எங்களிடம் பில்லருக்கு 4 கம்பி போட்டால் போதுமானது என்ற நிலையில் 4 கம்பி போதாது 6 கம்பியா போடுங்க என்றோ 6 கம்பி தேவைப்படும் இடத்தில் 4 போதும் செலவு அதிகமாகுது பக்கத்து வீட்டில் அப்படித்தான் போட்டங்க என்று விவாதம் செய்யும் வீடு கட்டுபவர், “நீங்க சொல்லுங்க அப்படியே செய்றோம் என்று பெட்டி பாம்பாய் அடங்குகிறார் வாஸ்து பார்ப்பவரிடம், 10 ஆண்டுகளுக்கு முன் நான் கல்லூரி படிக்கும் போது மில் தொழிலாளி அந்த வாஸ்து நிபுணர்.

என்னுடைய நண்பர் ஒருவரின் தங்கை தன்னுடைய முதல் பிரசவத்திற்கு தன் தாய் வீட்டிற்கு வந்திருந்தார். சோதிடனின் அலோசனையின் பேரில் தன் 8 வது மாதத்தில் கணவர் வீட்டிற்கே திரும்பி போய் விட்டார். மேலும் குழந்தை பிறக்கும் வரை அம்மா வீட்டில் இருந்து யார் வந்து பார்த்தாலும் பிறக்கும் குழந்தைக்கு நல்லதல்ல என்ற பயமுறுத்தல் வேறு ஆக மொத்தத்தில் ஒரு பெண் தாயாகும் நேரத்தில் அவளுடைய தாயிடமிருந்து பிரித்து வைத்தது சோதிடம் .

இப்படியாக ஒவ்வோர் துறையிலும் அறிவியலைப் பின்னுக்குத் தள்ளி, மத மூடநம்பிக்கை, கேள்வி கேட்காத இடத்தைப் பிடிப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால் இங்கு தமிழகச் சூழலில் ஒரு வித்தியாசத்தை உணரலாம் பொதுவாக எனக்கு இதிலெல்லாம் நம்பிக்கை இல்லை வீட்டுல கட்டாயப்படுத்தறாங்க என்ற முற்போக்கு முகமூடி போடுவார்கள்.

ஜோதிடம், வாஸ்து, இராசிக்கல், எண் சோதிடம், பெயரியல் என அனைத்து விதமான பிற்போக்குத்தனங்களையும் கேலியும் கிண்டலும் பேசும் சமுகம், ஜாதி, சடங்கு மறுப்பு போன்ற முற்போக்கு நடவடிக்கைகளை உயர்வாகப் பேசாவிடினும் கேலி பேசுவதில்லை. வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறி விட்ட (பூஜை போட்டு துவங்கப்பட்ட) திரைப்படங்களிலும் கூட போராளியைக் கதை நாயகனாகவும், ஜோதிடன், இராசிக்கல்காரன் ஆகியோரை காமெடியானாக காட்டுகிறார்கள்.

வெகுமக்களால் கேலி செய்யப்படும் மூடநம்பிக்கைகள் அவர்களாலேயே பின்பற்றப்படுகிறது. மேலே நாம் சொன்னபடி உயர்வாகக் கருதப்படுகிற முற்போக்கு விசயங்கள், தன் வீட்டில் நுழையாமல் பார்த்துக் கொள்வார்கள். இரகசியம் என்ன?

ஜாதி மறுப்புத் திருமணங்களை எடுத்துக்கொள்வோம். இன்றைய இளைய தலைமுறை தங்களின் வழிகாட்டியாய் எடுத்துக்கொண்டுள்ள புகழ்பெற்ற திரைப்பட நடிகர்கள், பெரும்பாலும் ஜாதி மாறி திருமணம் செய்கிறார்கள். ஆனால் அவர்களைப் பின்பற்றும் இவர்கள் ஜாதிக்குள்ளேயே திருமணம் செய்கிறார்கள். இரகசியம் என்ன?

இப்படியாக ஆயிரம் முரண்களுக்குள் வாழ்கிறோம். நமக்கான வாழ்க்கையில் நம் விருப்பங்களை நிறைவேற்றத் தடையாக இருக்கும் இரகசியம் என்ன? ஆம் அது கற்பிதங்களைக் கேள்விக்குள்ளாக்கக் கூடாதென்ற ஊரறிந்த இரகசியம் ..

அனைத்தையும் கேள்வி கேட்டுப்பாருங்கள் வாழ்வின் அர்த்தம் விளங்கும் உங்களின் உண்மையான முகம் உங்களுக்கே தெரியும். ஆம். கற்பிதங்களைக் கேள்வி கேட்க, திராவிடர்களாகிய உங்களை இந்துவாய் வைத்திருக்கும் இரகசியத்தை அறிய நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்

ஓ .இந்துக்களே .

தாய் மதம் திரும்புங்கள் .

மதமற்றவர்களாக ..



# செத்துக்கிடந்தான் வாஸ்து புருசன்....



பல் துலக்கி
தாம்புலம் தரித்த நேரத்தில்
பூசை செய்து...
வட கிழக்கு முலையில்
அடைத்து...

நல்ல முகூர்த்தத்தில்
நிலக்கால் வைத்து.....

கடக்காலிருந்து
வர்ணமும் பூசும் வரை
நால்வர்ணமும் உள்ளிருந்ததாம் ..
தீட்டுக் கழித்து
அழகிய வீட்டில்
குடியேறினார் குப்புராசு
சித்தப்பா...

முதன்மைச் சாலையோரம்
பிரம்மாண்டமாய்
அமைந்திருந்தது...

ஆறு வழிச்சாலை
விரிவாக்கத்திற்காய்
நேற்று வீட்டை இடித்திருந்தனர்...

இன்று
லாரிகளின் சக்கரத்
தேய்ப்புகளிடையே
செத்துக்கிடந்தான்
வாஸ்து புருசன்....

அ.ப.சிவா




# நாப்கின் அனுப்பும் போராட்டம்

கேரளாவின் கொச்சி நகரின் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள்ள ASMA RUBBER PRODUCTS என்ற நிறுவனத்தின் கழிவறையில் பயன்படுத்தப்பட்ட நாப்கின் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதை அங்கே போட்டது யார் என்று கண்டறிய அங்கு பணிபுரியும் 50 வயதிற்கு குறைவான 42 பெண்கள் அவர்களது பெண் மேலாளர்களால் உடைகளைக் களைந்து சோதனை செய்யப்பட்டனர். இந்தச்செய்தி கேரளாவை உலுக்கியுள்ளது. கடந்த டிசம்பர் 10, 2014 அன்று நடைபெற்றதாகச் சொல்லப்படும் இச்சம்பவம் குறித்து காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து கேரளாவில் Kiss Of Love போராட்டக் குழுவினர் மேற்கண்ட ASMA RUBBER PRODUCTS நிறுவன மேலாளர் முகவரிக்கு நாப்கின்கள் அனுப்பும் போராட்டத்தை அறிவித்து நடத்தி வருகிறார்கள்.

இது ஒரு பொய்ப் புகார் என அந்நிறுவனத்தின் தரப்பில் சொல்லப்பட்டாலும், நாம் இதில் கவனிக்க வேண்டிய செய்தி ஒன்று உள்ளது.

பெண்களுக்கான சுகாதார வசதிகள் இந்தியாவில் எந்த அளவுக்கு மோசமாக உள்ளன என்பதை நாம் தினந்தோறும் அனுபவிக்கிறோம். குறிப்பாக பயணங்களில் பெண்கள் அனுபவிக்கும் துன்பம் வெளியில் தெரியாதது.


இந்தியாவின் கிராமங்களில் உள்ள 70 சதவிகித வீடுகளில் கழிவறைகள் இல்லை என அரசே சொல்கிறது. நகரங்களில் கூட பொதுக் கழிவறைகளைப் பயன்படுத்தும் குடும்பங்களே அதிகம். இதில் பெண்களின் தனித்துவமான சிக்கலான மாதவிடாய் காலங்களில் கழிவறையின் தேவை மறுக்கப்படுகிறது. பயன்படுத்தப்பட்ட நாப்கின்களை சரியான முறையில் டிஸ்போஸ் செய்ய எவருக்கும் தெரிவதில்லை.

பெருநிறுவனங்களில் கூட நாப்கின்களை போடுவதற்கு குப்பைத் தொட்டிகளை வைத்துப் பராமரிப்பதில்லை. இதனால் கழிவறைகளில் போடப்படும் நாப்கின்களால் கழிவறைக் குழாய்கள் அடைத்துக் கொண்டால் அதனை ஒரு தூய்மைத் தொழிலாளிதான் சுத்தம் செய்ய வேண்டியுள்ளது. இது மற்றொரு கொடுமையான மனித உரிமை மீறலுக்கு அடிப்படையாகிறது.

பெண்களுக்கான போதுமான சுகாதார வசதிகளை செய்து தராமல் "தூய்மை இந்தியா" போன்ற வெற்று முழக்கங்களை வைப்பது எந்த விதத்திலும் பயன் தராது.

மற்றொரு புறம், படித்த பெண்களே கூட, நாப்கின்களை செய்தித்தாளில் நன்கு சுற்றி குப்பைத் தொட்டியில் போட வேண்டும் என்ற சிந்தனையின்றி அப்படியே தூக்கி எறிகின்றனர். இதனைச் சுத்தம் செய்பவர்கள் தங்களைப் போன்ற மனிதர்கள்தான் என்ற சிந்தனை அவர்களுக்கு இருப்பதில்லை. இதற்கு அடிப்படைக் காரணம், தங்களின் சுத்தத்திற்கென இந்திய ஜாதிய சமூகம் குறிப்பிட்ட சில ஜாதியினரை ஒதுக்கி வைத்துள்ளது.

ஆக தாங்கள் எவ்வளவு அசுத்தம் செய்தாலும் அதனைச் சுத்தம் செய்யும் கடமை உடையவர்கள் குறிப்பிட்ட ஜாதியினர் என்ற சிந்தனை உள்ள வரை தூய்மை பற்றிய விழிப்புணர்வு இந்திய ஜாதிய சமூகத்தில் ஏற்பட வழியே இல்லை.




# பெரும்பான்மை மக்களை சூத்திரர் என இழிவுபடுத்தும் வேத, புராண, சாஸ்திரங்களைத் தடைசெய்!

# சமுதாய சுயமரியாதை விழிப்புணர்வுக் கூட்டம்

சிறப்புரை:

## தோழர். கொளத்தூர் மணி

தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்

2015 ஜனவரி **23**
மாலை 5.00
திருச்செங்கோடு

வெளியீடு: சுயமரியாதை கலைப் பண்பாட்டுக் கழகம்

ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு: காட்டாறு, 1/810, முத்தமிழ்நகர், நத்தம்சாலை, திண்டுக்கல். 624 003 kaattaaru2014@gmail.com